PL (J)

PUBLIC LIBRARY
JAFFNA

AHARAM
அகரம்

தரம் 5 - 11 வரை எண்: 09 எழுத்து: 05 மே - 2015 www.aharam.lk



மே 01 தொழிலாளர்களை கண்ணியப்படுத்துவோம்

யூனுஸ் நபியை விழுங்கிய திமிங்கிலம்

மாதாந்த சிறுவர் சஞ்சிகை 50/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாஅல்லாஹ், ரஜபிலும் ஷஃபானிலும் எமக்கு பரக்கத் செய்வாயாக,

ரமழானை அடையும் பாக்கியத்தை எமக்கு அருள்வாயாக.

ரஜப், ஷஃபான் ஆகிய இரு மாதங்களும் முறையே ரமழானுக்கு முந்திய இரு மாதங்களாகும். ரஜப் மாதத்தை அடைந்தவுடன் மேற்கண்டவாறு பிரார்த் திப்பவர்களாக நபிகளார் இருந்தார்கள். நாமும் அத்தகைய நபி வழியைப் பின்பற்ற வேண்டும். இது ரஜப் மாதம் ஆகும்.

நபி (ஸல்) அவர்கள் ரமழானை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள். அதனை அடையும் நற்பேறு கிடைக்க வேண்டும் என அதிகமதிகம் அல்லாஹ் விடம் இரு கரமேந்தினார்கள். அத்தகைய எதிர்பார்ப்பும் ஆர்வமும் ஆவலும் எம்மிடமும் நிறைந்திருக்க வேண்டும்.

மற்றுமொரு ரமழான் எம்மை அண்மித்துவிட்டது. காலச் சக்கரம் வேக மாகவே சுழல்கிறது. இம் முறை ரமழானை சிறப்பாகப் பயன்படுத்த இப்போதே திட்டமிடுவோம். அதே நேரம், எம்மை அடைந்திருக்கும் ரஜப் மாதத்தில் அதற் கான தயார்படுத்தல்களில் ஈடுபடுவோம். ஷஃபானையும் உரியமுறையில் பயன்படுத்துவோம்.

ஷஃபான் நபியவர்கள் அதிகமதிகம் சுன்னத்தான நோன்புகள் நோற்ற மாதமாகும். எனவே, நாமும் இம்முறை ஷஃபானில் அதிகம் அதிகம் நோன்பு நோற்க வேண்டும் என உறுதி எடுப்போம். அதனை நடைமுறைப்படுத்து வோம், இன்ஷா அல்லாஹ்.

ரமழான் வரும்வரை காத்திருக்காமல் இப்போது அதற்கான தயார்படுத்தல் களை மேற்கொண்டு இம்முறை ரமழானை சிறந்த முறையில் பயன்படுத்தி இறை அருளை அதிகம் பெற முயல்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AHARAM அகரம்

எண்: 09, மே: 2015, எழுத்து: 05

PUBLIC LIBRARY
JAFFNA

பிரதம ஆசிரியர்
டாக்டர் ஆதில் அஹ்மட் ஷரிபுத்தீன்

ஆலோசனைக் குழு

அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

பொறுப்பாசிரியர்
ஜே.எம். அஸீம் (நளீமி)

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்

சந்தா விபரம்

தனிப்பிரதி	50/-
1 வருட சந்தா	800/-
6 மாத சந்தா	400/-

தொடர்புகளுக்கு:
அகரம்
77, தெமடகொட வீதி
கொழும்பு 09
தொ.பே : 076 670 4787
பெக்ஸ் : 011 268 6030
www.aharam.lk
E.mail: editor@aharam.lk

உள்ளே...

யூனுஸ் நபியை விழுங்கிய திமிங்கிலம்

04

மாணவர்களின் ஆளுமை அபிவிருத்தியில்... 19

மின்னல் தாக்கமும் பாதுகாப்பும்

22

புலம்ப வேண்டாம்...!
செயலில் இறங்கவும்...!

34

11

38

07

பாடத்திட்டம்

புலமைப்பரிசில்	39	வரலாறு	16
அறபு மொழி	14	விஞ்ஞானம்	31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசு இரிதல்

மாணவர்களிடம் ஆய்வு மனப்பாங்கு வளர வேண்டும்

நீங்கள் தினமும் புதிதாக எதையாவது கற்கின்ற மாணவரா? அறிவைத் தேடிப் பெறுவதில் ஆர்வமுள்ளவரா? வகுப்பில் ஆசிரியர் கற்பிக்கும்போது அதற்குப் பங்களிக்கும் வகையில் கேள்விகள் கேட்டுக் கற்றுக்கொள்பவரா? தெரியாத விடயத்தை தெரிந்தவர்களிடம் கேட்டு அறிந்து கொள்பவரா? எந்தவொன்றையும் வினாத் தொடுத்து தர்க்க ரீதியாக அறிந்து கொள்வதில் ஈடுபாடுள்ளவரா?

அப்படியென்றால் சிறந்த மாணவராக நீங்கள் இருக்கின்றீர்கள் என்று சொல்லலாம். தினமும் புதிய புதிய விடயங்களை உலகம் கண்டுவருகிறது. விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் தொழில்நுட்ப மாற்றங்களும் அறிவு விருத்தியும் இத்தகைய புதிய புதிய விடயங்களை உலகிற்கு வழங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றை விரல் நுனியில் கொண்டு வந்து சேர்ப்பதில் இணையம் பெரும் பங்காற்றுகிறது.

எதையும் தேடிக் கற்கின்ற மாணவர்களாக நீங்கள் திகழ வேண்டும். புதிய புதிய விடயங்களை அறிவதில் உங்கள் ஆர்வம் மிகைக்க வேண்டும். மாணவர்களிடம் கற்பதில் தணியாத தாகமும் தளராத முயற்சியும் நிறைந்திருக்க வேண்டும். அவைதான் மாணவர்களுக்கு கற்றலின் பாலான ஈடுபாட்டை அதிகரிக்கச்செய்ய உதவும்.

வாசிப்பு, வீட்டு நூலகம் போன்ற ஆய்வுக் கலாசாரம் எம்மிடம் அரிதாகவே இருக்கின்றது. ஆனால் மேலைநாடுகளில் வீட்டு ஆய்வு கூடங்கள் சாதாரண விடயங்களாக உள்ளன. அதனால்தான் அங்கு ஏராளமான ஆய்வுகள் நடக்கின்றன. தாராளமாகவே கண்டுபிடிப்புகளும் நிகழ்கின்றன.

நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

தினமும் உங்களுக்குக் கிடைக்கும் சில ரூபாய்களை சேமித்து பயனுள்ள நூல்களை வாங்குங்கள். உங்களிடம் யாராவது என்ன அன்பளிப்பு வேண்டும் என்று கேட்டால் அவ்வாறானதொரு புத்தகத்தையே கேளுங்கள். இப்படி ஒவ்வொரு புத்தகமாக சேகரித்து வீட்டில் ஒரு குட்டி நூலகத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள். சிறுதுளி பெருவெள்ளம் போல.

தினமும் நூல்களை வாசிக்கவும் பயனுள்ள புதிய தகவல்களைத் தேடிப் பெறவும் ஆகக் குறைந்தது அரை மணித்தியாலம் என்ற காலவரையறையை நிர்ணயித்துக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்நாளில் நீங்கள் அரை மணித்தியாலம் புத்தகம் வாசிக்காத ஒரு நாளும் இனி இல்லை என திடஉறுதி பூண்டு கொள்ளுங்கள்.

எதையும் ஆய்ந்தறியவும் தேடிக் கற்கவும் எப்போதும் தயாராக இருங்கள். சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள். மூளைக்கு வேலை கொடுங்கள். உங்கள் ஆய்வு மனப்பாங்கையும் தேடல் உள்ளத்தையும் விருத்தி செய்யும் வகையில் மூளையை ஆரோக்கியமாக வைத்திருங்கள். தேவையற்ற விடயங்களில் கவனம் செலுத்த வேண்டாம்.

இந்த மூன்று விடயங்களையும் கடைப்பிடிப்பேன் என உறுதி எடுங்கள். நாளை உங்கள் வீட்டில் நல்லதொரு நூலகம் நறுமணம் வீசட்டும். உங்கள் தேடல் விசாலமாகட்டும். அறிவு விரிவடையட்டும். நல்லதொரு ஆரோக்கியமான அறிவு, ஆய்வு சமூகமாக நீங்கள் மலருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூஹுறைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள். "உங்களில் ஒருவர் தும்மினால் அவர் அல்ஹம்துலில்லாஹ் என்று கூறட்டும். (அதைக் கேட்கும்) அவரது சகோதரர் அல்லது தோழர் யர்ஹமுகல்லாஹ் என்று கூறட்டும். அவர் யர்ஹமுகல்லாஹ் என்று கூறினால் (தும்மியவர்) யஹ்தீகுமுல்லாஹு வயுஸ்லிஹு பாலகும் என்று சொல்லட்டும்." (ஸஹீஹுல் புகாரி)

மனிதர்களுக்கு அல்லாஹ் ஏற்படுத்தியிருக்கின்ற இயற்கைகளுள் ஒன்றாக தும்மல் காணப்படுகின்றது. ஒருவர் தும்முகின்றபோது அவர் ஒருவித புத்துணர்வை பெறுகின்றார். அவரது சுவாசக் குழாயில் இருக்கும் அடைப்புகள் வெளியேறுகின்றன. தும்மலினால் மனிதர்களுக்கு பல நன்மைகள் விளைவதை விஞ்ஞானமும் ஒப்புக் கொண்டுள்ளது.

இந்த ஹதீஸில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒருவர் தும்மும்போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்றும் தும்மியவருக்கு அருகில் உள்ளவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் அழகிய முறையில் கற்றுத் தந்துள்ளார்கள்.

தும்மிய ஒருவர் தனது உணர்வுகளும் உடல் இயக்கமும் சீராக செயற்படுவதற்காக நன்றி செலுத்தும் வகையில் அல்லாஹ்வைப் புகழும் முகமாக அல்ஹம்துலில்லாஹ் என்கின்றார். அதைக் கேட்பவர் அல்லாஹ்வைப் புகழ்வதை செவியேற்கச் செய்ததற்கு நன்றி சொல்லும் விதமாக தும்மியவருக்கு அல்லாஹ்வின் அருளைவேண்டி, அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக என பிரார்த்திக்கின்றார்.

அதனைத் தொடர்ந்து தும்மியவர் தனக்கு பிரார்த்தித்தவருக்காக மீண்டும் அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டி உங்களை சீர்படுத்துவானாக என பிரார்த்தனை செய்கின்றார். இவ்வாறு செய்வதன் மூலம் பரஸ்பர அன்பு ஏற்படுவதுடன் நன்மையும் கிட்டுகின்றது.

தும்மிவிட்டு அல்லாஹ்வைப் புகழாத மனிதருக்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மறுமொழி கூறி பிரார்த்திப்பதிலிருந்து தவிர்ந்து கொண்டார்கள்.

ஒரு தடவை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு அருகிலிருந்த இருவர் தும்மினார்கள். அப்போது அவர்களில் ஒருவருக்கு நபியவர்கள் (அல்லாஹ் உங்களுக்கு கருணை புரிவானாக) என மறுமொழி கூறினார்கள். மற்றவருக்கு அவ்வாறு கூறவில்லை. அப்போது அந்த மனிதர் அல்லாஹ்வின் தூதரே! இவருக்கு மறுமொழி கூறினீர்கள். எனக்கு கூறவில்லையே? என்று கேட்டார். அதற்கு நபியவர்கள் இவர் தும்மியவுடன் (அல்ஹம்துலில்லாஹ்) என்று அல்லாஹ்வைப் புகழ்ந்தார். நீர் அவ்வாறு அல்லாஹ்வைப் புகழவில்லை. எனவே, இவருக்கு மறுமொழி பகர்ந்தேன். உமக்கு மறுமொழி பகரவில்லை என்று பதிலளித்தார்கள். (புஹாரி)

வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வின்போதும் அடியான் தனது ரப்பை துதிக்க வேண்டும். அல்லாஹ்வைப் புகழ்வதில் அவனது நாவு திளைக்க வேண்டும். மக்களுக்கு மத்தியில் அன்பும் சகோதரத்துவமும் வலுப்பெற வேண்டும் என இஸ்லாம் விரும்புகின்றது. எனவேதான் இத்தகைய அழகிய இறை நினைவுடன் கூடிய வழிகாட்டல்களை இஸ்லாம் மனித சமூகத்திற்கு வழங்கியுள்ளது.

இன்று மாணவர்கள் சிலர் இத்தகைய பிரார்த்தனைகளை அலட்டிக் கொள்வதில்லை. மற்றும் சிலர் யர்ஹமுகல்லாஹ் எனச் சொன்னவருக்கு யஹ்தீகுமுல்லாஹு வயுஸ்லிஹு பாலகும் என மீளப் பிரார்த்திக்காத நிலைமையும் காணப்படுவது கவலைக்குரியதாகும்.

முஸ்லிம் அல்லாதவர்கள் தும்முகின்றபோது எவ்வாறு நடந்து கொள்வது என்பதையும் நபியவர்கள் காட்டித் தந்துள்ளார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் யர்ஹமுகல்லாஹ் (அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!) எனக் கூற வேண்டும் என்பதை எதிர்பார்த்து யூதர்கள் வேண்டுமென்றே நபியவர்களுக்கு முன்னிலையில் தும்முவார்கள். யூதர்கள் எதிர்பார்ப்பது போன்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறாமல் யஹ்தீகுமுல்லாஹு வயுஸ்லிஹ் பாலகும் (அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டி உங்களை சீர்படுத்துவானாக) என்று கூறி விடுவார்கள். (அபுதாவுத்)

நாம் தும்முகின்றபோது அருகில் உள்ளவர்கள் மீது எச்சில்கள் பட வாய்ப்புள்ளது. இது அருவருப்பையும் பிரச்சினைகளையும் ஏற்படுத்தலாம். அது மாத்திரமன்றி, தும்மலால் ஏற்படும் சப்தம் அருகில் உள்ளவர்களுக்கு இடையூறை ஏற்படுத்தலாம்.

18ஆம் பக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிப் அலி (இஸ்லாஹி)
www.aliaalif.tk / aalifali@gmail.com

யூனுஸ் நபியை விழுங்கிய திமிங்கிலம்

யூனுஸ் நபியின் சரித்திரத்தைப் படித்திருப்பீர்கள். அல்லாஹ் அவரை சிலை வணக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சுமார் நூறாயிரம் பேரைக் கொண்ட நீனவா என்ற நகருக்கு நபியாக அனுப்பினான். அம் மக்கள் அவரது போதனையை ஏற்கவில்லை என்ற கவலையில் அவ்வூரை விட்டு அவர் கடலோரம் நடந்து சென்று ஒரு கப்பலில் ஏறினார். கப்பலில் ஆட்களின் எண்ணிக்கை அதிகம் என்பதால் அவர் கடலில் குதிக்க வேண்டியதாயிற்று. கடலில் குதித்ததும் ஒரு பெரிய மீன் அவரை விழுங்கியது. நாற்பது நாட்கள் அதன் வயிற்றுக்குள் அல்லாஹ் அவரை வைத்திருந்தான். அவர் தொடர்ந்தும் அல்லாஹ்வைத் துதி செய்து கொண்டிருந்ததால் அல்லாஹ்வின் கட்டளையால் அம் மீன் அவரை கரையிலே தள்ளியது. இவ்வாறு யூனுஸ் நபியின் சரித்திரத்தை அல்லாஹ் திருமறையில் பல இடங்களில் (37:141) குறிப்பிடுகின்றான். ஒரு மனிதனையே விழுங்கி உடலில் வைத்திருக்குமளவு மீன் என்றால் அநேகமாக அது திமிங்கிலமாகத்தான் இருக்க வேண்டும் என்பது அறிஞர்களின் கருத்து. எனவே, அல்லாஹ்வின் இவ்வற்புதத் திமிங்கிலங்களின் வாழ்க்கை முறைகளைப் பற்றி சற்று அவதானிப்போம்.

அறிமுகம்

உலகிலே உள்ள நீர் வாழ், நில வாழ் உயிர்கள் அனைத்துடனும் ஒப்பிடுகையில் மிகப் பெரிய உயிரினம் நீலத் திமிங்கிலம் தான் (Blue Whale). இது சுமார் 100 அடி நீளமும் 150 தொன் எடையும் கொண்டதாக இருக்கும். நீலத் திமிங்கிலத்தின் நாக்கில் 50 பேர் உட்காரக் கூடிய அளவு இடமிருக்குமாம். இத்தகைய திமிங்கிலங்கள் மிகவும் சாதுவான குணம் கொண்டவை. இவை 70 முதல் 100 ஆண்டுகள் வரை வாழக் கூடியவை. பொதுவாக நாம் திமிங்கிலங்களையும் மீன்கள் என்றே கருதுகின்றோம். ஆனால் திமிங்கிலம் மீன் வகையைச் சார்ந்ததல்ல. மீன்களுக்கும் திமிங்கிலங்களுக்கும் நிறைய வேறுபாடுகள் காணப்படுகின்றன. திமிங்கிலம் வெப்ப இரத்தம் கொண்ட பிராணி. ஆனால் மீன்கள் குளிர் இரத்தம் கொண்ட பிராணி.

திமிங்கிலம் நுரையீரல் மூலம் சுவாசிக்கின்றது. மீன்களோ தமது இருபக்கமும் உள்ள சுவாசப் பூக்கள் (Gill) மூலம் சுவாசிக்கின்றன. மீன்கள் கடலில் பாறை இடுக்குகளில் முட்டைகளை இட்டு குஞ்சு பொரிக்கின்றன. ஆனால், திமிங்கிலம் குட்டி ஈன்று அதற்குப் பால் கொடுத்து வளர்க்கின்றது. திமிங்கிலத்தைப் பொறுத்தவரை அதன் உடலில் செதில்கள் காணப்படுவதில்லை. தோலும் மயிர்களும் அதன் உடலில் இருக்கும். ஆனால் மீன்களின் உடலில் செதில்கள் நிறைந்திருப்பதைக் காணலாம். இவ்வாறான பல்வேறு வித்தியாசங்கள் திமிங்கிலங்களை மீன்களிலிருந்து பிரித்துக் காட்டுகின்றன.

உடலமைப்பு

திமிங்கிலங்களில் (Whales) 75 வகைகள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த 75 வகைகளையும் விஞ்ஞானிகள் இரு பெரும் பிரிவு களாகப் பிரிக்கின்றனர். ஒன்று, வாயின் இரு புறங்களிலும் வலிமையான தாடைகளுடன் கூடிய பற்களுடையவை. Sperm whale, Beaked, Narwhals, Beluga, Shark whales, killer whales, Dolphin மற்றும் Porpoises போன்ற வகைகள் இதற்குள் அடங் கும். இரண்டு, பற்கள் அற்றவை அல்லது வாயில் baleen என்ற சீப்பு போன்ற அமைப்பைப் பெற்ற திமிங்கிலங்கள். இதில் Rorquals, Gray whales, Blue whales, Right whales என்பன அடங் குகின்றன. பொதுவாக, இவை கடலில் நீந்திப் பயணிப்ப தற்கு ஏற்றவாறான அமைப்பைக் கொண்டுள்ளன. இரண்டு பக்கங்களிலும் பெரிய அளவிலான துடுப்புகள் வலம், இடம், மேல், கீழ் என சுற்றிச் சுழன்று நகர; வால்கள் கூர்மையான செவிப்புலன், மந்தமான பார்வைப் புலன் என்பவற்றைக் கொண்டுள்ளன.

திமிங்கிலம் வெப்ப இரத்தப் பிராணி என்பதால் அதனைத் தக்கவைத்துக் கொள்ள இவற்றின் தோலின் உட்புறத்தில் புர தத்தை உள்ளடக்கிய Bubbler என்னும் மிகத் தடித்த ஒரு கொழுப்புப் படலம் படிந்துள்ளது. இது இவற்றின் உடல் வெப்பத்தை உறை நிலையைக் கடந்த துருவப் பகுதிகளிலும் சீராக வைத்துக் கொள்ளவும் தங்களுக்குத் தேவையான சத் துக்களை சேகரித்து வைத்துக் கொள்ளவும் உதவுகின்றது.

மனிதனின் மூளையைக் காட்டிலும் அளவில், நிறையில் பெரிய மூளையுடைய பாலூட்டிகள் இரண்டே இரண்டுதான். ஒன்று யானை மற்றது திமிங்கிலம். உலகில் உள்ள பாலூட்டி களில் (அல்லது உயிரினங்களில்) மிகப் பெரிய மூளையுடை யது என்ற சிறப்பும் இதற்கு உண்டு. எம்மைப்போன்றே இவற் றுக்கும் இதயத்தில் நான்கு அறைகள் உள்ளன.

சுவாச முறை

திமிங்கிலங்கள் நீரில் வசித்தாலும் அவை மற்ற மீனினங் களை போல சுவாசப் பூக்களால் (Gill) சுவாசிப்பதில்லை. அவை மனிதனைப்போன்று நுரையீரலைக் கொண்ட பிராணிகள் என் பதால் எப்போதெல்லாம் சுவாசிக்க வேண்டுமோ அப்போ தெல்லாம் நீரின் மேற்பரப்புக்கு வந்து காற்றை உள்ளிழுத்துச் செல்லவேண்டும். திமிங்கிலங்களின் நுரையீரல் மிகவும் பெரிதாக இருப்பதால் ஒரே தடவையில் பெருமளவிலான காற்றை உட்சேமிக்க முடியும். மேலும், இவற்றின் தலையின் மேற்பரப்பில் அமைந்துள்ள Blow hole என்ற சுவாசக் குழாய் அமைப்பு நுரையீரலுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ள தாலும் மற்ற பாலுட்டிகளைப் போன்று தொண்டையின் மூலம் சுவாசம் செல்ல வேண்டிய அமைப்பு இல்லை.

மற்ற விலங்குகளுக்குப் போலல்லாது இவற்றின் மூக்கை (Blow hole) அல்லாஹ் தலையின் மேற்பகுதியில் வைத்துள் ளான். அவை நீரின் மேல் மட்டத்திற்கு வந்து தேவையான அளவு காற்றை வாயாலும் தலைப்பகுதியில் அமைந்துள்ள மூக்கின் வழியாகவும் உள்ளிழுத்துக் கொண்டு நீருக்கடியில் சென்றுவிடுகின்றன. இம்மூக்குத் துளை (Blow hole) பலீன் வகை திமிங்கிலங்களுக்கு இரண்டும் பற் திமிங்கிலங்களுக்கு



ஒன்றும் உள்ளது. இவ்வாறு ஒருமுறை காற்றை நுரையீரலில் நிரப்பிக் கொள்ளும் திமிங்கிலங்கள் 7,000 அடி வரை நீரின் ஆழத் திற்கு சென்று இரை தேடும் வல்லமை பெற் றவை. இத்தகைய சிறப்பமைவுக்கு மற்று மொரு காரணமும் சொல்லப்படுகிறது: நாம் காற்றை சுவாசிக்கும்போது அதில் இருந்து 15 சதவிகித ஒட்சிசனை மட்டுமே நமது நுரையீரல் எடுத்துக் கொள்கிறது. ஆனால் திமிங்கிலங்கள், உள்ளிழுக்கும் காற்றில் இருந்து 90 சதவிகித ஒட்சிசனை எடுத்துக் கொள்ளும் திறமை பெற்றிருப்பதே இவ் வகையான நீண்ட நேர மூச்சடக்கும் திற மைக்கு காரணமாகும், சுப்ஹானல்லாஹ்!

சுவாசிப்பதற்காக இவை தண்ணீரின் மேற் பரப்பிற்கு வரும்போது ஒரு வகையான பாட லைப் பாடிக் கொண்டு பெரும் சப்தத்தோடு தங்கள் தலையின் மேற்பரப்பில் அமைந்த சுவாசக் குழாய் (Blow hole) மூலம் தண்ணீரை 9 மீற்றர் உயரம் வரை நீர் கம்பம் (Water Spout) போல பீய்ச்சி அடிக்கின்றன. இதனை நிறையக் கடற் பிரயாணிகள் கூட கண்டு புகைப்படம், வீடியோ எடுத்திருக்கின்றார் கள்.

உணவு முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திமிங்கிலங்கள் மீன்களையும் சிறிய, பெரிய கணவாய்களையும் வேட்டையாடி உண்கின்றன. தங்களின் முக்கிய உணவாக உட்கொள்ளும் Giant squid என்னும் மீன் இனத்தின் நீளம் 10 மீற்றர் என்றால் இவற்றின் வாயின் அளவையும் பற்களின் வல்லமையையும் எண்ணிப் பாருங்கள். இவை இத்தகைய வாய் மற்றும் பல் அமைப்பை பெற்று விளங்குவதனால் மிகப் பெரிய அளவிலான மீன்களைக் கூட ஒரே நேரத்தில் பிடித்து விழுங்க முடிகின்றன. குறிப்பாக, இவை ஆயிரக்கணக்கில் திரளாக இருக்கும் மீன்களைத் தேடிச் சென்று அவற்றை ஒரே நேரத்தில் விழுங்கி விடுகின்றன. திரளாக உள்ள மீன் கூட்டத்தைக் கண்டால் திமிங்கிலம் தன் வாயை அகலத் திறந்த நீரை உறிஞ்சி தலைமேல் உள்ள மூக்குப் பகுதியால் நீரை வெளியேற்றும். இதன்போது மீன்கள் நீருடன் இழுபட்டு திமிங்கிலத்தின் வாயினுள் சென்றுவிடும். இனி கதை அவ்வளவுதான்!

திமிங்கிலங்கள் சராசரியாக ஒரு நாளைக்கு 1500 கிலோ கிராம் வரையான உணவை உட்கொள்ளுகின்றன. இவை தங்களின் உணவை பிடித்து உண்டதன் பின்னர் தண்ணீரின் மேற்பரப்பிற்கு வந்து 10 முதல் 15 நிமிடங்கள் வரை காற்றை நன்கு சுவாசித்து ஒட்சிசனை சேமித்துக் கொண்டு மீண்டும் ஆழ்கடலை நோக்கி தங்கள் பயணத்தை தொடர்கின்றன. சிலபோது இரையைத் தேடி கடலின் இருண்ட ஆழத்திற்கும் செல்கின்றன. 1000 மீற்றர் முதல் 2000 மீற்றர் (இரண்டு கிலோ மீற்றர்) ஆழம் வரை செல்லக் கூடிய ஆற்றல் பெற்றது. ஆழக்கடலின் வெளிச்சம் அறவே இல்லாத அடர்ந்த இருளில் இரையைப் பிடிக்க இவை எதிரொலி உத்தியைப் (echo location) பயன்படுத்துகின்றன.

வாழும்போது பல உயிர்களையும் தின்று வளர்ந்த ஒரு திமிங்கிலம் அது இறந்ததும் பல இலட்சம் உயிரினங்களுக்கு உணவாக மாறுகின்றது. இறந்ததன் பின் ஒரு மாமிசம் மலைபோலக் கடல் அடியில் போய் அடங்கும் திமிங்கிலங்களின் உடலை எண்ணற்ற நுண்ணுயிரிகளும், பெயர் அறியாத உயிரினங்களும் ஆண்டுக்கணக்கில் உண்டு வாழ்கின்றன. அல்லாஹ் எவ்வாறானதோர் உணவுச் சமநிலையை வைத்திருக்கின்றான் என்று பாருங்கள்.

தொடர்பாடல் முறை

நீரில் ஒலியலைகள் மிக வேகமாகப் பரவ வல்லவை. எனவே திமிங்கிலங்கள் ஒலி சமிக்ஞைகளை நீரில் பரவவிட்டு ஒன்றை ஒன்று தொடர்பு கொள்கின்றன. ஒலி எழுப்பும்போது இவை வாயை மூடி மூக்குப் பகுதியால் அதிர்வெண் கூடிய ஒலியலைகளை எழுப்புகின்றன. இந்த ஒலியை நீரில் பல ஆயிரம் கிலோ மீற்றர்களுக்கு அப்பால் உள்ள மற்றைய திமிங்கிலங்களால் கூட உணர முடியுமாக இருக்கும். இந்த ஒலியை எம்மாலும் கேட்க முடியும். இது அழகான பாடல் போன்று இனிமையாக, வித்தியாசமாக இருக்கும். இத்தளத்தை பாருங்கள். www. aliaalif.lk

இனப்பெருக்க முறை

இனப்பெருக்ககாலங்களில் ஆண் திமிங்கிலங்கள் நீண்ட இசையுடன் கூடிய சப்தங்களை தொடர்ச்சியாக எழுப்புகின்றன. இந்த இசையொலி அலைகளால் கவரப்பட்ட பெண் திமிங்கிலங்கள், துல்லியமாக ஆண் திமிங்கிலத்தின் இருப்பிடத்தை கண்டறிந்து வருகின்றன. கருக்கொண்ட பெண் திமிங்கிலங்களின் கர்ப்ப காலம் 12 மாதம் முதல் 17 மாதங்கள் வரை ஆகும். இது இனத்திற்கு ஏற்ப வித்தியாசப்படும். பிரசவ காலத்தில் மற்ற திமிங்கிலங்கள் கர்ப்பிணியை சூழ்ந்து கொண்டு செவிலித் தாயார் போன்று உதவுகின்றன. குட்டித் திமிங்கிலம் பிறந்த உடன் மற்ற செவிலித் திமிங்கிலங்கள் அதை நீரின் மேல் மட்டத்திற்கு தூக்கி வந்து முதல் சுவாசத்தை ஏற்படுத்துகின்றன. குட்டித் திமிங்கிலம் உடனடியாக, தானே நீந்தக் கூடிய திறமையைப் பெறுகிறது. திமிங்கிலக் குட்டி பிறக்கும்போது 25 அடி நீளமுடன் ஒரு யானையின் எடையுடன் இருக்கும். ஒரு நாளைக்கு 200 லீற்றர் பாலைத் தம் தாயிடம் இருந்து குடித்து மணிக்கு 5 கிலோ நிறையில் வளருகிறது. பெண் திமிங்கிலங்கள் இரண்டு அல்லது நான்கு வருடங்களுக்கு ஒரு முறை மட்டுமே குட்டி போடக் கூடியவை.

அறிவுக் கூர்மை

மனிதர்களின் மூளையைக் காட்டிலும் அளவில் பெரிய மூளை திமிங்கிலங்களுடையதாகும். மூளையின் அளவிற்கும் அறிவுத் திறனுக்கும் தொடர்பு இருப்பதாக விஞ்ஞானிகளினால் நம்பப்படுகின்றது. 1970 ஆண்டளவில்தான் திமிங்கிலங்களின் புத்திக் கூர்மையான செயற்பாடுகள் முதல் முதலாக அறியப்பட்டது. விஞ்ஞானிகள் திமிங்கிலங்களை புத்திசாலி

30ஆம் பக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெரிந்து கொள்வோம்



1. மனித உடலில் சுரக்கும் அமிலம் எது? ஹைட்ரோ குளோரிக் அமிலம்
2. சவர்க்காரங்களில் உள்ள அமிலம் எது? கொழுப்பு அமிலம்
3. எலுமிச்சம் பழத்தில் உள்ள அமிலம் எது? சிற்றிக் அமிலம்
4. பித்த நீரை உருவாக்கும் உறுப்பு எது? கல்லீரல்
5. பெருமூளையில் உள்ள நரம்பணுக்கள் எத்தனை? 20 லட்சம் கோடி

எம்.என்.எப். ருகையா
தரம் 9
அல் ஹிதாயா ம.வி.

பனித்துளிகள்

- உனது அச்சங்களை உன்னுடன் வைத்துக் கொள்! ஊக்கத்தை மட்டும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்! (ஸ்டீவன்சன்)
- வெற்றிக்கான திறவுகோல் எதுவென்று எனக்கு தெரியாது. ஆனால், தோல்விக்கான திறவுகோல் எல்லோரையும் திருப்திப்படுத்த முயற்சிப்பதாகும்.
- கண்ணியமானவர்களுடன் கிண்டலடிக்க வேண் டாம். அவர்கள் உங்களுடன் கோபித்துக் கொள்வார்கள். இழிவானவர்களுடனும் அப்படி நடக்க வேண் டாம். அவர்கள் உங்களுக்கு எந்த அபாயத்தை செய்ய வும் துணிந்து விடுவார்கள். (அப்துல்லாஹ் இப்னு ஹுபைக்)
- யாரிடம் உண்மை பேசுவது குறைந்து விடுமோ... அவனுக்கு நணபர்களும் குறைந்து விடுவார்கள்.
- ஒரு மனிதனுக்கு அல்லாஹ் நல்லது செய்ய நாடி னால் அவனுக்கு நல்லதொரு நண்பனைக் கொடுப்பான்.
- அதிகமாக சிரிக்காதே! ஏனெனில் அல்லாஹ்வுடன் தொடர்புபட்ட உள்ளம் எப்போதும் கண்ணியமாக இருக்கும். (ஹஸனுல் பன்னா)
- நீங்கள் இன்று செய்த உதவியை, மனிதர்கள் நாளை மறந்து விடலாம். ஆனாலும் மற்றவர்களுக்கு உதவி செய்யுங்கள்.

பின்த் ஸவாஹிர்
அல் ஹஸ்ஸானிய்யா மு.வி.
மக்கொன



அறிவை தேடித் தரும் 7 பெரும் பாவங்கள்

1. அல்லாஹ்வுக்கு இணை வைப்பது.
2. வட்டி உண்பது.
3. அநாதைகளின் சொத்துக்களை அபகரிப்பது.
4. போர் நடந்து கொண்டிருக்கும் போது புறமுதுகு காட்டல்.
5. சூனியம் செய்வது.
6. விசுவாசியான ஒழுக்கமுள்ள பெண்கள் மீது அவதூறு கூறுதல்.
7. அல்லாஹ் தடுத்தவற்றிலிருந்து விலகி நடக்காமை.

எம்.எப். ருஸ்தா
1 ஆம் வருடம்
ஜாமிஆ ஸித்தீகா அ.க.
காத்தான்குடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதின் நோய்கள் பத்து

1. ஏக இறைவன் இருக்கின்றான் என்று நீங்கள் நம்புகிறீர்கள். ஆனால் அவனுடைய கட்டளை களை நீங்கள் நிறைவேற்றுவதில்லை.
2. இறைத் தூதர் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை நேசிப்பதாக நீங்கள் கூறுகின்றீர்கள். ஆனால் அவர்களுடைய வழிமுறையை நீங்கள் பின்பற்றுவதில்லை.
3. திருக்குர்ஆனை நீங்கள் ஓதுகிறீர்கள். ஆனால் அதன்படி செயற்படுவதில்லை.
4. இறைவனின் அனைத்து அருட்கொடைகளை யும் நீங்கள் அனுபவிக்கிறீர்கள். ஆனால் அவ னுக்கு நன்றி செலுத்துவதில்லை.
5. ஷைத்தான் உங்கள் எதிரி என்று ஒப்புக் கொள் கிறீர்கள். ஆனால் அவனுடைய கட்டளைகளுக்கு மாறு செய்வதில்லை.
6. சுவனம் புக வேண்டும் என்று நீங்கள் விரும்பு கிறீர்கள். ஆனால் அதற்காக உழைப்பதில்லை.
7. உங்களை இறைவன் நரகத்தில் தூக்கி எறிவதை விரும்பவில்லை. ஆனால் அதிலிருந்து தப்பிப்ப தற்கு நீங்கள் முயல்வதில்லை.
8. வாழும் உயிர்கள் அனைத்தும் இறப்பை சந்தித்தே தீரும் என்று நீங்கள் நம்புகிறீர்கள். ஆனால் அதற் காக ஆயத்தம் செய்வதில்லை.
9. நீங்கள் பிறரைப் பற்றி வதந்திகள் பேசி அவர் களிடம் குறை காண்கிறீர்கள். ஆனால் உங்களிட முள்ள குறைகளையும் கெட்ட பழக்கங்களை யும் மறந்து விடுகின்றீர்கள்.
10. இறந்தவர்களை நீங்கள் புதைக்கிறீர்கள். ஆனால் அதிலிருந்து நீங்கள் படிப்பினை பெறுவதில்லை.

சிபானா ஹுசைன்
பாத்திமா ஸஹ்ரா ம.அ.க.

பெரியார்களின் கருத்துக்கள் சில

''கருத்துக்கு முன்னால் பலவீனமானவன் நடுங்கு கின்றான்; அறிஞர்கள் அதை எடை போடுகிறார்கள். திறமை மிக்கவர்கள் அதை இலக்காக மாற்றுகின் றார்கள்.'' (மேடம் ஜீன் ரோனால்டு)

''நம்பிக்கை என்பது புயல் காற்றில் துவண்டு விழும் மெல்லிய மரம் அல்ல; அது அடி பெயரா இமயத் தைப் போன்றது'' (காந்திஜி)

''நூல் நிலையம் என்பது ஆடம்பரமான ஒன்றல்ல. வாழ்க்கையின் இன்றியமையாத தேவைகளில் அது வும் ஒன்றாகும்.'' (எச்.டபிள்யூ. பீச்சர்)

''குறைந்தபட்ச வாக்குகளை அளிப்பவருக்கு வாக் களியுங்கள். ஏனென்றால், அவர் குறைந்தபட்ச ஏமாற் றத்தையே தருவார்.'' (பேர்ன்னாட் பரூக்)

''நீங்கள் உலகை மாற்றுவதற்கு பயன்படுத்தக் கூடிய மிகச் சக்தி வாய்ந்த ஆயுதம் கல்வியாகும்.'' (நெல்சன் மண்டேலா)

''ஆசிரியர்கள் கதவைத் திறக்கிறார்கள். நீங்கள்தான் அதனூடே நுழைய வேண்டும். மிக முக்கியமான விட யம் எதுவென்றால் கேள்வி கேட்பதை நிறுத்தி விடா மையாகும்.'' (அல்பர்ட் ஐன்ஸ்டீன்)

''கல்வியின் முதன்மையான நோக்கம் கண்ணாடி களை ஜன்னலாக மாற்றுவதுதான்'' (சிட்னி ஜே ஹெர்டன்ஸ்)

''முடியாதது என்று எதுவும் இல்லை. சரியான வழி தெரியாமல்தான் தோல்வியடைகிறார்கள்.'' (ரோச்/ போல்டு)

எப்.எப். நிப்ரோசா திக்ரா
2 ஆம் வருடம்
பாத்திமா ஸஹ்ரா பெ.அ.க
ஓட்டமாவடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

சிந்தனைக்கு விருந்து

- ❖ தற்பெருமை எங்கு முடிவடைகிறதோ, அங்குதான் ஒழுக்கம் ஆரம்பிக்கிறது.
- ❖ அன்பில்லாவிட்டால் எவ்வளவு ஞானம் இருப்பினும் இறைவனை அடைய முடியாது.
- ❖ வாலிபத்தில் கவனமின்றி துள்ளினால் வயதான காலத்தில் வருந்த வேண்டும்.
- ❖ அருகிலுள்ளவர்களுக்கு இன்பம் அளித்தால் தொலைவில் உள்ளவர்கள் தேடி வருவார்கள்.
- ❖ உலகத்திலேயே மிகவும் மலிவானது அன்பு ஒன்றுதான். அது வாங்கியவனுக்கும் கொடுக்கிறவனுக்கும் பல மடங்கு இலாபத்தை தரும்.
- ❖ பலர் வேதாந்திகள் போல் பேசுகிறார்கள். ஆனால் முட்டாள்கள் போல் வாழ்கிறார்கள்.
- ❖ மற்றவர்களுடைய துன்பங்களை உணர முடியாதவன் மனித உருவத்திலுள்ள விலங்காவான்.
- ❖ தன்னுடைய திறமைக்கு தக்கபடி ஒருவன் எந்த வேலை செய்யினும் அது அவனை முன்னேற்றும்.

ஸாஜித் அஹமட் ஸஹ்தீ
அல் ஹுமைஸரா தே.பா.
பேருவளை



சிந்திக்க...

- ✍ உன்னைப் பற்றி பின்னால் பேசுபவர்கள் தொடர்பில் நீ கவலைப்படாதே; அவர்கள் உன்னை விட பின்னால் இருக்கிறார்கள். நீ முன்னிலையில் இருக்கிறாய் என்பதை அறிந்துகொள்.
- ✍ சில சந்தர்ப்பங்களில் நீ தோற்றுப்போகலாம். அதற்காக உன் வாழ்க்கையே தோற்றுவிட்டது என்று நீ தோய்ந்து விடாதே. முயற்சி செய் முடியுமானவரை அல்ல. அத்தோல்வி வெற்றியாகும் வரை.
- ✍ விடியும் என்ற எண்ணத்தில் தூங்கச் செல்லும் நீ, முடியும் என்ற எண்ணத்தில் எழுந்திரு; அனைத்தையும் சாதிக்கலாம்.
- ✍ உலகில் நாம் வாழ வேண்டும், சாகும் வரை அல்ல; நம்மை வெறுத்தவர்கள் நம்மை வாழ்த்தும் வரை.
- ✍ தோல்வி அடைவது தொடர்பில் பயப்படாதே. ஆனால் தோல்விக்கான காரணத்தை அறியாமல் இருந்துவிடாதே.
- ✍ உன் நோக்கம் என்ன என்பதில் தெளிவாக இரு. அதற்கு நேர்மாறானவர்களுடன் நேரத்தை வீணடிக்காதே. நோக்கத்தை நோக்கிச் செயற்படு.
- ✍ அன்பை வெளிப்படுத்த யோசிக்காதே. ஆனால் கோபத்தை வெளிப்படுத்த முன் யோசிக்க மறந்துவிடாதே.
- ✍ எல்லோரையும் நேசி. சிலரை மட்டுமே நம்பு. ஆனால் ஒவ்வொருவரிடமும் இருந்து எதையாவது ஒன்றையேனும் கற்றுக்கொள்.

ஜெலால்தீன் ஹஸ்மியா
தரம் 11
நீக/ நம்முவாவ மு.ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்துல் கலாமின் பத்து உறுதி மொழிகள்

1. நான் என் வாழ்க்கையில் நல்ல இலட்சியத்தை மேற்கொள்வேன். நன்றாக உழைத்து படித்து என் வாழ்க்கை இலட்சியத்தை அடைய முற்படுவேன்.
2. நான் ஜாதியின் பெயராலோ, மதத்தின் பெயராலோ, மொழியின் பெயராலோ எவ்வித பாகுபாடும் பாராட்டாது எல்லோரிடமும் சமமாக நடந்து கொள்வேன்.
3. நான் எனது விடுமுறை நாட்களில் எழுதப் படிக்கத் தெரியாத ஐந்து பேருக்காவது எழுதப் படிக்கச் சொல்லிக் கொடுப்பேன்.
4. என் வீட்டிலோ அல்லது பாடசாலையிலோ குறைந்த பட்சம் ஐந்து செடிகளையாவது நட்டு வைத்து மரம் வளர உதவுவேன்.
5. மது, சூதாட்டம் மற்றும் போதைப் பழக்கங்களுக்கு ஆளாகி துயருறும் ஐந்து பேரையாவது மீட்டு அதிலிருந்து நல்வழிப்படுத்த முயற்சி செய்வேன். துயர்படும் ஐந்து பேரைச் சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் அளித்து அவர்களது துயரைத் துடைப்பேன்.
6. நான் வாழ்க்கையில் நேர்மையாக நடந்து கொண்டு மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்க முயல்வேன்.
7. என் தாய் மற்றும் தாய்நாட்டை நேசிப்பேன். பெண் குலத்துக்கு உரிய மரியாதையும் கண்ணியத்தையும் அளிப்பேன்.
8. எல்லோருக்கும் அறிவு தீபத்தை ஏற்றி அணையா தீபமாக சுடர்விடச் செய்வேன்.
9. நான் உண்மையான, தூய்மையான வாழ்க்கை வாழ்வேன்.
10. ஊழலற்ற வெளிப்படையான எனது வாழ்க்கையின் மூலம் பிறருக்கு எடுத்துக் காட்டாக விளங்குவேன்.

ஏ.டபிள்யூ.எம். ஸஹ்ரான்
போகல்லே உளப்பன்ன

பொது அறிவு

- உலகில் முதன் முதலாக சூரியன் உதிக்கும் நாடு எது? பீஜிங் தீவு
- சூறாவளி ஏற்படுவதை எத்தனை மணிநேரத்திற்கு முன்பாகவே அறிந்து கொள்ள முடியும்? 48 மணி நேரத்திற்கு முன்பு
- ஒரு பவுண் தங்கமானது எத்தனை மஞ்சாடிக்கு சமன்? 132 மஞ்சாடி விதைகளுக்குச் சமன்
- நவீன விண்வெளியுகத்தின் தந்தை எனப்படுபவர் யார்? சியாஸ் கோல்ஸ்கி
- மனித உடலில் எந்த பாகம் முதலில் இறக்கிறது? மூளையின் கலங்கள்
- இலங்கையில் ஒருவர் வருடத்திற்கு எவ்வளவு அரிசியை உட்கொள்கிறார்? 104 கிலோ கிராம்
- ஈ-மெயில் ஐ அறிமுகப்படுத்தியவர் யார்? சிவா ஐயாத்துரை
- இலங்கையின் முத்திரை 'ராஜா' எனப்படுபவர் யார்? எர்னஸ்டி சில்வா
- சாகும் வரை வளர்ச்சியடையும் உயிரினங்கள் எவை? மீனும் முதலையும்
- மிகச் சிறிய இதயம் உள்ள மிருகம் எது? சிங்கம்
- அதிகம் பற்களுடைய விலங்கு எது? நாய்
- பெண்களுக்கு வாக்குரிமை அளித்த முதல் நாடு? நியூஸிலாந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Miss. Aysha Hassan

Assalamu alaikum dear friends,

This month I thought of doing something different…. Shall we all go to the hottest part of the earth.. Yeah, you all guessed it right. Get ready to make a trip to the deserts of the world. Most of us think that deserts are extremely hot. But you know that there are cold deserts as well. The Artic and Antarctic are examples for cold deserts. There are semi-arid and coastal deserts as well.

But as I told you before, in this issue we are going to discuss about the hot deserts.

What comes to your mind when you hear the word desert??? Yes I am quite sure that all of you must have thought of the Sahara desert which is obviously the largest hot desert on earth. Ok, now think about how we identify a desert. A desert is a place where it hardly rains. The annual rainfalls of most of the deserts are even less than 25 cm.

Deserts are places where people live a very hard life. This is not only because of the extreme hotness, but also because of lack of vegetation and water in deserts.

Did you know???

- Many animals living in the deserts are nocturnal. They come out during the night time due to the unbearable heat in the day time.
- Desert animals generally have a light sandy color. This color helps reflect sunlight and minimize the absorption of heat.
- About 1,000 square miles of Chinese land turns into desert every year, fueling deadly, globe-circling dust storms.

- The sudden sand storms occurring in deserts change the complete physical landscape of the deserts making travelers hard to find their way.
- The Sahara desert was once covered with fauna and flora but it is human activities that made the situation from bad to worse.

Even though the life in deserts is very hard, still there are many people who live in deserts. They live a very challenging life as they need to bear the heat and search for water and food. That is the reason for most of the people there, live a nomadic life style. They don't permanently settle in one place, instead they travel from one place to another in search of water and grass lands for their cattle.

Try to explore more about desert biomes. Believe me you'll come to know many interesting and amazing facts which you all might have perhaps never have heard of.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Laugh a while...

Son: Mama how do vegetable vendors dispose their rotten vegetables???

Mom: Simple. They sell it off to your dad...

Hadith of the month

Whenever Allah's Apostle saw the rain, he used to say, "O Allah! Let it be a strong fruitful rain."

Sahih Bukhari

Your Corner

Ambition

Everyone has their own ambitions. It is because they plan to have a good future. Many people like to become lawyers, engineers, pilot, accountant, scientists. But my ambition is to become a doctor. I think the profession of a doctor is interesting. A doctor does a huge service to the society. People respect doctors. Doctors are kind towards people. I like to help others. I like to be with people and serve them.

I study hard, because my ambition is to help others. One day I will become a doctor. Insha Allah.

M.N.F Ashfa 7-E
Kg/Mw/Al- Azhar M.M.V
Hemmathagama

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Good thoughts



- If there is a will there is way
- Cheat not! And be cheated not!
- Today's savings will help you tomorrow
- Greed leads to grief
- Slow and steady wins the race
- Vanity is foolishness
- Look before you leap
- Might is not always right
- One good leads to another

A.L.M Nafeel Grade 06
Bt/Sem Al-HamraVidyalaya



Water is the gift of God. We are lucky that we do not have to share water with any other country. If we are to preserve the natural beauty of Srilanka, we have to manage our water resource. Srilanka is called 'the pearl of Indian ocean' because of its physical land shape and natural beauty.

Many people depend on river water for their daily needs like cooking washing and drinking. Water plays a vital role in our lives

On the other hand there are problems without water. So it is our duty to protect the water resources. Thus we and our future generations can lead a happy, healthy and comfortable life.

S. Hasna 11-B
PallivasalThurai M.M.V

I am receiving a lot of articles from you all. Please note that your piece of work does not exceed a page. Make it as brief as possible so that I can give chances to many of you. Keep on giving your suggestions and views regarding the page. Your feedback matters a lot.

I'm eagerly waiting for your contributions with comments, stories,- poems and essays. The best ones will be published insha Allah.
So write to me at

I learn every day

A 61/ 5,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)

اَلْقِيَاسَاتُ அளவைகள்

كَسْرٌ ج كُسُورٌ، كُسُورَاتٌ — பின்னம் (பங்குகள்) — اَلْكُسُورُ பின்னங்கள்



كَامِلٌ ثَلَاثَةُ أَرْبَاعٍ نِصْفٌ ثُلُثٌ رُبُعٌ ثُمُنٌ

اَلْقِيَاسَاتُ அளவுகள்



سَنْتِيمِتْرٌ ج سَنْتِيمِتْرَاتٌ

سَنْتِيمِتْرٌ (سم) 12

بُوصَةٌ ج بُوصَاتٌ —— அங்குலம்

بُوصَةٌ / الإِنْشُ 13

مِيلٌ ج أَمْيَالٌ —— மைல்

مِيلٌ بَحْرِيٌّ —— கடல்மைல்

مِتْرٌ ج أَمْتَارٌ

قَدَمٌ ج أَقْدَامٌ —— அடி

كِيلُو مِتْرٌ ج كِيلُو مِتْرَاتٌ

يَارْدَةٌ ج يَارْدَاتٌ —— யார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



النِّسَبُ

வீத அளவுகள்

النِّسَبُ / نِسْبَةُ ج النِّسَب

خمسون في المائة	50 வீதம்
عشرةٌ في المائة	10 வீதம்
ثَمَانُونَ في المائة	80 வீதம்
عِشْرُونَ في المِائَة	20 வீதம்
مائةٌ في المائة	100 வீதம்

الأَرْقَام

இலக்கங்கள்

صِفْرٌ	பூச்சியம்
وَاحِدٌ	ஒன்று
إِثْنَانِ	இரண்டு
ثَلَاثَةٌ	மூன்று
أَرْبَعَةٌ	நான்கு
خَمْسَةٌ	ஐந்து
سِتَّةٌ	ஆறு
سَبْعَةٌ	ஏழு
ثَمَانِيَةٌ	எட்டு
تِسْعَةٌ	ஒன்பது
عَشَرَةٌ	பத்து
أَحَدَ عَشَرَ	பதினொன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு

தரம் 10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

தரம் - 10

1. புராதன அரசியலில் இடம்பெற்ற மூன்று தாபனங்களையும் அவற்றின் முக்கிய நோக்கங்களையும் தருக.
2. அநுராதபுர கால மன்னர்களுள் வைத்தியத் துறைக்கு தொண்டாற்றிய நான்கு பேரைத் தருக.
3. 'அக்கால பொருளாதாரத்தில் மந்தை வளர்ப்பும் விவசாயமும் மிகவும் முக்கியம் பெற்றன' விளக்குக.
4. 'அக்காலத்தில் கைத்தொழில் சிறப்பாக வளர்ச்சியடைந்தது' இதனை மூன்று உதாரணங்கள் மூலம் விளக்குக.

விடைகள்

1. சட்டம் - நாட்டுக்கு அவசியமான சட்டங்களை இயற்றுதல்.

   நிருவாகம் - சட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

   நீதி - சட்டத்தை மீறுவோரைத் தண்டித்தல்.

2. i. புத்ததாச மன்னன்
   ii. ஐந்தாம் மகிந்தன்
   iii. நான்காம் காசியப்பன்
   iv. முதலாம் உபதிஸ்ஸ மன்னன்

3. **மந்தை வளர்ப்பு**

   புராதன காலத்தில் மந்தை வளர்ப்பு ஒரு முக்கிய தொழிலாக இருந்தது. ஆடு, மாடு, கோழி என்பன மக்களால் பல்வேறு தேவைகளுக்காக வளர்க்கப்பட்டன. மாடு வளர்ப்போர் வாழ்ந்த கிராமம் கோபாலகம் எனப்பட்டது. விவசாய நடவடிக்கைகளுக்காவும், உணவுத் தேவைகளுக்காகவும் மாடுகள் வளர்க்கப்பட்டன. தயிர், நெய், வெண்ணெய் என்பன மக்களது முக்கிய உணவுகளாக இருந்தன. நான்காம் காசியப்ப மன்னன் பொறித்த கல்வெட்டில் 'கிரிகெரி' என்ற சொல் இடம்பற்றுள்ளது. இது பால் தரும் பசுக்களைக் குறிப்பிடுகின்றது.

விவசாயம் :

புராதன மக்களின் பிரதான தொழிலாக விவசாயமே விளங்கியது. விவசாயத்தில் சேனைப் பயிர்ச் செய்கையும் நெற் செய்கையும் முக்கியம் பெற்றன. தீயிடப்பட்டு சேனைச் செய்கைக்காக பெறப்பட்ட காணி நவதெனி எனப்படும் சேனையில் குரக்கன், கொள்ளு, உழுந்து, பயறு, சோளம் முதலியன பயிரிடப்பட்டன. நெற்செய்கை இடம் பெறும் வயல், கல்வெட்டுக்களில் 'கெத' என்று அழைக்கப்பட்டது. வருடாந்தம் இருபோகங்களில் நெற்செய்கை இடம்பெற்றது. பெரும்போகம், சிறுபோகம் என்பன அந்த இரு போகங்களின் பெயர்களாகும். நீர்ப்பற்றாக்குறையை எதிர்நோக்கிய உலர்வலய மக்கள், நீர்ப்பாசனம் மூலம் நெற்செய்கையை மேற்கொண்டனர்.

4. **உலோகக் கைத்தொழில்:**

   புராதன காலத்தில் இடம்பெற்ற முக்கிய கைத்தொழிலாக உலோகக் கைத்தொழில் அமைகின்றது. கல்வெட்டுக்களில் இடம்பெற்ற 'கபர்' என்னும் பெயர், உலோகக் கைத்தொழிலில் ஈடுபட்ட கம்மாளரைக் குறிக்கின்றது. இரும்பை உருக்கி பல கருவிகளைச் செய்யும் பட்டறைகள் அக்காலத்தில் காணப்பட்டன. இப்பட்டறைகளில் வேலை செய்த கொல்லர்கள், விவசாயிகளுக்குத் தேவையான மண்வெட்டி, ஏர், அரிவாள் என்பவற்றை உருவாக்கினர். இத்தொழிலில் ஈடுபட்ட மஜ்ஜிம என்வரைப் பற்றி பொலன்னறுவை மாவட்டத்தில் முதுகல்லை என்ற இடத்தில் உள்ள ஒரு கல்வெட்டு கூறுகின்றது.

தங்கக் கைத்தொழில்

புராதன காலத்தில் தங்கக் கைத்தொழில் நன்கு வளர்ச்சியடைந்திருந்தது. புராதன பதிவேடுகளில் இடம்பெற்ற துலாதர என்ற சொல் தங்கத் தொழிலில் ஈடுபட்ட பொற்கொல்லரைக் குறித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மண்ட கல என்ற இடத்தில் உள்ள கல்வெட்டில் சுமண என்ற பொற்கொல்லர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலத்தில் வாழ்ந்த பொற்கொல்லர்கள் மாணிக்கம் மற்றும் ஏனைய விலையுயர்ந்த கற்களைப் பயன்படுத்தி மாலைகள், மோதிரங்கள் முதலியவற்றை செய்தனர். தங்கக் கைத்தொழிலில் ஈடுபட்டவர்கள் 'மணிகர்' என்றும் அழைக்கப்பட்டனர்.

மட்பாண்டக் கைத்தொழில்

அக்காலத்தில் வாழ்ந்த சாதாரண மக்கள் அன்றாடம் பாவித்த பொருட்கள் மட்பாண்டங்களாகும். மட்பாண்டம் வனைதல் அக்காலத்தில் தேர்ச்சி பெற்ற ஒரு தொழிலாக இருந்தது. பல்வகையான மட்பாண்டத்துண்டுகள், பல இடங்களிலும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இற்றைக்கு 2250 ஆண்டுகளுக்கு முன்பு செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் கூட மட்பாண்டக் கைத்தொழில் பற்றிய தகவல்களைத் தருகின்றன. அக் கல்வெட்டுக்கள், வனைதல் தொழிலில் ஈடுபட்டவர்களை 'கும்பகார்' என்று குறிப்பிடுகின்றன.

தரம் - 11

1. இந்தியாவில் ஆங்கிலேயருக்கெதிரான கிளர்ச்சிகள் இடம்பெற்ற ஆண்டுகளைத் தரும் விடை

   i. 1805, 1901 ii. 1806, 1851
   iii. 1850, 1857 iv. 1854, 1857

2. சிப்பாய் கலகத்தின் முக்கிய விளைவாக அமைந்தது.

   i. இந்தியா பிரித்தானியா முடியின் கீழ்வந்தமை.
   ii. யாப்பு சீர்த்திருத்தம் ஏற்பட்டமை.
   iii. புதிய ஆளுநர் நியமிக்கப்பட்டமை.
   iv. இந்தியாவுக்கு பொறுப்பாட்சி வழங்கப்பட்டமை.

3. ஆங்கிலேயருக்கு எதிரான அதிருப்தி ஏற்படுவதற்கு இந்தியாவில் ஏற்பட்ட பஞ்சமும் ஒரு காரணமாகும். மோசமான பஞ்சம் எங்கு தோன்றியது?

   i. தமிழ் நாட்டில் ii. பஞ்சாபி
   iii. குஜராத்தில் iv. வங்காளத்தில்

4. நிரல் 1 இல் இந்திய தேசிய வீரர்களின் பெயர்களும் நிரல் 2 இல் அவர்களோடு தொடர்புடைய விடயங்களும் தரப்பட்டுள்ளன.

   நிரல் 1

   1. பால கங்காதர திலகர்
   2. சுரேந்திர நாத் பானர்ஜி
   3. தடாபாய் நபரோஜி
   4. கோபால் கிருஸ்ண கோகிலே

   நிரல் 2

   A இந்திய தேசிய சங்கத்தின் தந்தை
   B இந்தியாவின் மேன்மையாளர்
   C பெர்குசன் கல்லூரி அதிபர்
   D உலக அபிமானி

   நிரல் 1 க்கு ஏற்ப நிரல் 2 ஐ ஒழுங்குபடுத்தினால் சரியாக அமையும் விடை.

   i. DACB ii. DCBA
   iii. DACB iv. DABC

5. இந்திய அரசியல் வரலாற்றில் 1907 இல் நடந்த சம்பவமாக அமைவது.

   i. இந்திய தேசிய சங்கம் பிளவுபட்டமை
   ii. இந்தியா முடிக்குரிய நாடாக மாறியமை
   iii. இந்திய தேசிய சங்கம் உருவாகியமை
   iv. ஆங்கிலேயருக்கு எதிராக மகாத்மா காந்தி செயல்பட ஆரம்பித்தமை

6. மகாத்மா காந்தியின் புகழ்பெற்ற பாத யாத்திரை இடம்பெற்ற இடம்.

   i. டில்லி கோட்டையிலிருந்து சபர்மதி ஆசிரமம் வரை
   ii. நாக்பூர் ஆசிரமத்திலிருந்து கல்கத்தா கோட்டை வரை
   iii. சபர்மதி ஆசிரமத்திலிருந்து தண்டி கடற்கரை வரை
   iv. மும்பாயிலிருந்து சென்னை வரை

7. நிரல் 1 இல் இலங்கையின் தேசிய வீரர்களின் பெயர்களும் நிரல் 2 இல் அவர்களோடு தொடர்புடைய விடயங்களும் உள்ளன.

   நிரல் 1

   1. வலானே சித்தார்த்த தேரர்
   2. இரத்மலானை தர்மாலோக தேரர்
   3. அநகாரிக தர்மபால
   4. டீ.பி. ஜயதிலக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரல் 2

A மகாபோதி சங்கம்

B பரம தம்விகாரை

C பௌத்த வாலிப சங்கம்

D வித்தியலங்கார பிரிவெனா

நிரல் 1 க்கு ஏற்ப நிரல் 2 ஐ ஒழுங்குபடுத்தினால் சரியாக அமையும் விடை

i. BDCA ii. BDAC

iii. BACD iv. ABDC

8. தோட்டத் தொழிலாளர்களின் முதலாவது தலைவராக செயற்பட்டவர்?

i. குணசிங்க

ii. டி.எஸ். சேனநாயக்க

iii. கே. நடேச ஐயர்

iv. சேர் பொன்னம்பலம் இராமநாதன்

9. நுவரவாவியையும், மினிப்பே கால்வாயையும் புனரமைத்த ஆங்கில ஆளுநர்கள்?

i. ஆத்தர் கோடன், மெக்கலம்

ii. ஆத்தர் கோடன், ஹென்றி ஆத்தர் பிளேக்

iii. வெஸ்ட் றிஜ்வே, மெக்கலம்

iv. ஹென்றி ஆத்தர் பிளேக், மெக்கலம்

10. கோப்பிப் பயிருக்கு இலை வெளிறல் நோய் ஏற்பட்ட ஆண்டு?

i. *1868* ii. *1688*

iii. *1886* iv. *1905*

11. சோல்பரி யாப்பில் மேல்சபையிலும் கீழ்சபையிலும் இடம்பெற்ற அங்கத்தவர்கள் முறையே

i. *15, 30* ii. *30, 45*

iii. *101, 30* iv. *30, 101*

12. டொனமூர் யாப்பில் இலங்கையருக்கு வழங்கப்பட்ட ஒரு அதிகாரம்

i. பாதுகாப்பு ii. காணி

iii. வெளிவிவகாரம் iv. நிதி

13. 1924 ஆம் ஆண்டு யாப்பில் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்டோர் எண்ணிக்கை

i. *51* ii. *29*

iii. *43* iv. *60*

14. இரட்டை ஆட்சி முடிவுக்கு வந்த ஆண்டு.

i. *1800* ii. *1802*

iii. *1815* iv. *1948*

விடைகள்

1. iii
2. i
3. iv
4. iv
5. i
6. iii
7. ii
8. iii
9. iv
10. i
11. iv
12. ii
13. ii
14. ii

ஹதீஸ்... (03ஆம் பக்கத் தொடர்...)

இவற்றைத் தடுக்க நபியவர்கள் தும்மும்போது தனது கரத்தால் வாயை மூடி, இயன்றளவு சப்தத்தைக் குறைக்க முயற்சித்துள்ளார்கள். நபியவர்கள் இதனை தனது வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

அபூஹுறைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தும்மும்போது தனது வாயின் மீது கையையோ, துணியையோ வைப்பார்கள். அதன் மூலம் சப்தத்தைக் குறைத்துக் கொள்வார்கள். (அபுதாவுத்)

நாமும் தும்முகின்றபோது இத்தகைய நபி வழியைப் பின்பற்றி அதிக நன்மைகளைப் பெற்றுக் கொள்வோமாக!

"யாஅல்லாஹ், ரஜபிலும் ஷஃபானிலும் எமக்கு பரக்கத் செய்வாயாக, ரமழானை அடையும் பாக்கியத்தை எமக்கு அருள்வாயாக" ரஜப், ஷஃபான் ஆகிய இரு மாதங்களும் முறையே ரமழானுக்கு முந்திய இரு மாதங்களாகும். ரஜப் மாதத்தை அடைந்தவுடன் மேற்கண்டவாறு பிரார்த்திப்பவர்களாக நபிகளார் இருந்தார்கள். நாமும் அத்தகைய நபிவழியைப் பின்பற்ற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஹாப் ஏ. ஹனீபா (இஸ்லாஹி)

மாணவர்களின் ஆளுமை அபிவிருத்தியில்

பாடசாலைச் சிறுவர் பாதுகாப்புக் குழுவின் வகிபங்கு

ஒரு நாட்டின் எதிர்காலத்தையோ, சமூக அபிவிருத்தியையோ தீர்மானிக்கும் பிரதான காரணியாக அதன் சிறுவர் தலைமுறை அமைகிறது. அறிவால், திறன்களால் மற்றும் சாதகமான உளப்பாங்குகளால் பாடசாலையில் கட்டி வளர்க்கப்படுகின்ற சிறார்கள் 18 வயது நிறைவடைகையில் நற்பிரஜைகளாகவே சமூகத்துடன் இணைகின்றனர். மாபெரும் ஆளுமை படைத்த அத்தகைய மனிதன் ஒரு நாட்டுக்கு விலை மதிக்க இயலாத வளமாக அமைகின்றான்.

பாடசாலை மாணவன் அல்லது மாணவியின் அன்றாட செயலூக்கமிக்க காலப் பகுதியில் அரைவாசியோ அல்லது அதற்கு கூடிய காலப் பகுதியோ பாடசாலையிலேயே கழிகின்றன. இக்காலகட்டத்தில் பிள்ளைகளின் வளமிக்க வாழ்க்கைப் பருவத்தைப் பாதுகாத்து, அவர்கள் பெற வேண்டிய ஆளுமை விருத்திகளை வழங்குவதற்கு வழி செய்கின்ற வகையில் கல்வி அமைச்சினால் 2011/17 எனும் இலக்கம் கொண்ட ஒரு சுற்றுநிருபம் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இச் சுற்றுநிருபம் பாடசாலை சிறுவர் பாதுகாப்புக்குழு ஒன்றை அமைத்து அதனூடாக கல்வி அமைச்சும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அமைச்சும் இணைந்து நடைமுறைப்படுத்துகின்ற ஒரு நிகழ்ச்சிதிட்டம் பற்றிப் பேசுகிறது.

அன்புக்குரிய மாணவ, மணவிகளே! இக்குழு பற்றியும், இக்குழுவினால் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சிகள் பற்றியும் நீங்கள் எத்தகைய விளக்கங்களைப் பெற்றிருக்கின்றீர்கள்? இக்குழு மூலம் எவ்வளவு தூரம் பயன் அடைந்துள்ளீர்கள்? பாதுகாப்பு உட்பட உங்களுடைய பண்பாடு மற்றும் ஆளுமை விருத்திக்கு இக்குழுவினால் வழங்கப்படும் பங்களிப்புகள் பற்றி எவ்வளவு தூரம் அறிந்து வைத்துள்ளீர்கள்? இக்குழுவை நீங்கள் எவ்வாறு பயன்படுத்தலாம்? என்பன போன்ற கேள்விகளுக்கான சில பதில்களையே இக்கட்டுரை பேச எத்தனிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைச் சிறுவர் பாதுகாப்புக் குழுவின் அமைப்பு

'சுரக்கும் பவ்வ' என்றழைக்கப்படும் இப்பாட சாலைச் சிறுவர் பாதுகாப்புக் குழுவானது எவ்வாறு அமைக்கப்பட வேண்டும், யாரை உள்ளடக்க வேண் டும் என்பதை மிகத் தெளிவாகப் பேசுகிறது. பாட சாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் மாணவர்களைக் கொண்டதாக இக்குழு அமைக்கப் பட வேண்டும். குழு அங்கத்தவர்களின் எண்ணிக்கை ஒரு பாடசாலையில் கல்வி பயிலும் தரம் 06 இற்கு மேற்பட்ட மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப வேறுபடும். உதாரணமாக, 500 இற்கும் 1000 இற்கும் இடைப்பட்ட மாணவர்கள் உள்ள ஒரு பாடசாலை யில் அமைக்கப்படும் இக்குழுவில் இருக்கக் கூடிய மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 30 ஆகும். இவர்களுள் 22 மாணவர்கள், 4 ஆசிரியர்கள் மற்றும் 4 பெற்றோர் உள்ளடங்குகின்றனர்.

பாடசாலைச் சிறுவர் பாதுகாப்புக் குழுவின் நோக்கம்

இக்குழுவின் நோக்கங்களைப் பின்வருமாறு பட்டியற்படுத்தலாம்:

1. அனைத்து விதமான சிறுவர் துஷ்பிரயோகங்க ளிலிருந்தும் சிறுவர்களைப் பாதுகாத்தல்.
2. கல்விச் செயற்பாட்டில் பின்தங்கிய பிள்ளை களை வகுப்பு மட்டத்தில் இனங்காணலும் அதில் தாக்கமேற்படுத்தியுள்ள சமூக, பொருளாதார காரணிகள் மற்றும் குடும்பப் பின்னணியை இனங்காணும் பொருட்டு நடவடிக்கை எடுத்த லும், அவசியமான ஆலோசனைகளை வழங்கு தல், தொடர் நடவடிக்கைகள் மற்றும் வளப்பற் றாக்குறையை நிறைவு செய்வதற்கான வழிப் படுத்தல்களும்.
3. உள ரீதியான அல்லது உடல் ரீதியான விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகளுக்கு உதவி புரி தல்.
4. பிள்ளைகளின் மனவழுத்தங்களைக் குறைப்ப தில் தாக்கமேற்படுத்தக் கூடிய ஆக்கபூர்வமான சிகிச்சை நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்கல்.
5. பிள்ளைகளின் மகிழ்ச்சிகரமான உணர்வுகளை யும் துன்பகரமான அனுபவங்களையும் வெளிப் படுத்தலும் பரிமாற்றிக் கொள்வதற்கான வாய்ப் பினை வழங்கலும்.
6. பிள்ளைகள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக் கிடையிலான இடைத் தொடர்புகளை மேம்ப டுத்தல்.
7. பிள்ளைகளின் முறைப்பாடுகளுக்கு செவிமடுத் தல்.
8. பாடசாலைப் பிள்ளைகள் புகை பிடித்தல், மது பானம் மற்றும் போதைப் பொருள் பாவனை, பாலியல் தொல்லைகள் மற்றும் ஏனைய தீய நடத்தைகளின்பால் வழிநடத்தப்படுவதைத் தடுத்தல்.
9. ஒழுக்கம் நிறைந்த அவர்களின் நடத்தைகள் தொடர்பாக பாடசாலைப் பிள்ளைகளுக்குள்ள பொறுப்பு பற்றி விளக்கமளித்தலும் ஆக்கமுறை யான அவர்களின் ஆளுமைகளைக் கட்டியெழுப் புதலும்.
10. ஒழுக்கமுள்ள சிறுவர் நேயமுள்ள பாடசாலைச் சுற்றாடலை உருவாக்குதல்.
11. நிறைவான ஆளுமை கொண்ட பிரஜைகளை தேசத்திற்கு உரித்தாக்கிக் கொடுத்தல்.

'சுரக்கும் பவ்வ' என்றழைக்கப்படும் இப்பாடசாலைச் சிறுவர் பாதுகாப்புக் குழுவானது எவ்வாறு அமைக்கப்பட வேண்டும், யாரை உள்ளடக்க வேண்டும் என்பதை மிகத் தெளிவாகப் பேசுகிறது. பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் மாணவர்களைக் கொண்டதாக இக்குழு அமைக்கப்பட வேண்டும். குழு அங்கத்தவர்களின் எண்ணிக்கை ஒரு பாடசாலையில் கல்வி பயிலும் தரம் 06 இற்கு மேற்பட்ட மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப வேறுபடும்.

இத்தகைய நோக்கங்களைக் கொண்டமைந்த குழுவில் நீங்கள் பங்குபற்றினாலும் சரி, இக்குழு அமைந்துள்ள பாடசாலையில் நீங்கள் கல்வி பயின் றாலும் சரி இக்குழுவின் மூலம் நீங்களும் ஒட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்த மாணவர், மாணவியர் சமூகமும் மட்டில்லா பிரயோசனங்களை அடைந்து கொள்ளலாம் என்பதை மேலே கூறப்பட்ட நோக்கங்களிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

உதாரணமாக, நிறைவான ஆளுமை கொண்ட பிரஜைகளை தேசத்திற்கு உரித்தாக்கிக் கொடுத்தல் என்ற நோக்கம் ஒரு மாணவன் அவன் கற்கின்ற பாடசாலையிலிருந்து எல்லா வகையான ஆளுமைகளையும் கணிசமான அளவு பெற்றிருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. இத்தகைய ஆளுமைகளைக் கொண்ட ஒரு மாணவனாக சமூகத்தினுள் கால் பதிக்க வேண்டுமானால் வெறுமனே ஆசிரியர்களும் பெற்றோரும் மாத்திரம் முயற்சி செய்தால் போதாது. மாணவர்களாகிய உங்களிடம் அதற்கான தாகமும் முயற்சியும் ஒத்துழைப்பும் இருக்க வேண்டும்.

பாடசாலைச் சிறுவர் பாதுகாப்புக் குழுவின் செயற்பாடுகள்

மேலே சொல்லப்பட்ட நோக்கங்களை அடையும் வகையில் இக்குழுவினால் மேற்கொள்ளப்படக் கூடிய செயற்பாடுகளையும் இச்சுற்றுநிருபம் பேசுகிறது. அத்தகைய செயற்பாடுகளைப் பின்வருமாறு பட்டியற்படுத்தலாம்.

1. சிறுவர் துஷ்பிரயோகங்களை ஒழித்தல் மற்றும் சிறுவர்களின் பாதுகாவல் வழிமுறைகள் பற்றிய விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்:
2. உளச் சமூக செயற்பாடுகள்.
3. ஆளுமை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்.
4. தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.
5. அழகியல் மற்றும் ரசனை மேம்பாட்டுச் செயற்பாடுகள்.
6. பிள்ளைகளின் ஒழுக்கத்தை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள்.
7. தரவு முகாமைத்துவம் சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்கள்.
8. மாணவர்களில் பெரும் பகுதியினர் பலவீனமாக உள்ள மற்றும் பிரதான பாடங்களின் அறிவினை அபிவிருத்தி செய்வதற்கான நவீன வழிமுறைகள் சார்ந்த நிகழ்சித் திட்டங்கள்.
9. பரீட்சை செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட நிகழச்சித் திட்டங்களும் நேர முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களும்.
10. சிறுவர்களின் சுக துக்கங்களை அதிகாரிகளுக்கு எடுத்துக்கூறி விழிப்பூட்டுவதற்கான பெட்டியொன்றைப் பேணி வரல்.
11. குழுவினால் இனங்காணப்படுகின்ற பொருத்தமான பிற நிகழ்ச்சித் திட்டங்கள்.

இந்நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்பாடுகளையும் நோக்கும்போது பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவன் தனது பாடத்திட்டம் மற்றும் பாடபுறச் செயற்பாடுகளுக்கப்பால், தனது பள்ளி வாழ்க்கையையும் வாழ்க்கைப் பருவத்தையும் பக்குவமாகப் பாதுகாத்து, அறிவு, திறன் மற்றும் மனப்பாங்குகளில் சிறந்த விருத்தியை ஏற்படுத்திக் கொள்வதற்கான நிறைய வாய்ப்புகளை பாடசாலைச் சிறுவர் பாதுகாப்புக் குழு ஒரு மாணவனுக்கு அல்லது மாணவிக்கு வழங்குவதை யாராலும் மறுக்க முடியாது.

இத்தகைய பாடசாலைச் சிறுவர் பாதுகாப்புக் குழு தங்களுடைய பாடசாலையிலும் அமைக்கப்பட்டுள்ளதா? அவ்வாறு அமைக்கப்பட்டிருந்தால் அதனுடைய செயற்பாடுகள் எவை? அதிலிருந்து நான் எவ்வாறு பிரயோசனங்களைப் பெற்றுக் கொள்ளலாம்? அக்குழு வினைத்திறனுடனும் செயற் திறனுடனும் இயங்க எனது பங்களிப்பு என்ன? என்பதை நன்கு சிந்தித்துச் செயற்படும்போது நீங்களும் உங்களுடைய எதிர்கால சந்ததிகளும் பிரயோசனமடையலாம்.

உண்மையில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் செயற்பாடுகளிலும் ஈடுபாட்டுடனும் அக்கறையுடனும் இயங்குவதால் சில நேரம் இத்தகைய குழுவின் செயற்பாடுகளில் அக்கறையற்று, கவனயீனமாக இருக்கலாம். ஆனால் உங்களைப்போன்ற மாணவர்கள் தன்னார்வமாகவும் துடிப்புடனும் முன்வந்து செயற்படுவீர்களேயானால் ஆசிரியர்களினதும் பெற்றோரினதும் பங்களிப்பு நிச்சயம் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

பாடசாலைச் சிறுவர் பாதுகாப்புக் குழு சிறப்பாக இயங்கத் தயாராக இருக்குமெனில் உங்களுடைய பிரதேச செயலக மட்டத்திலிருந்து நிறைய வளவாளர்களையும் உங்களுக்காக ஒத்துழைப்பவர்களையும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

உங்களுடைய அறிவு, திறன், சிறந்த மனப்பாங்கு மற்றும் சிறந்த ஆளுமைகளைக் கட்டியெழுப்புவதற்கும் இவற்றினூடாக சிறந்த சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கும் இக்குழுவின் செயற்பாடுகள் காத்திரமான பங்களிப்புகளை வழங்குவதுடன் நீங்கள் கற்கும் பாடசாலைக்கும் பெருமிதம் சேர்க்க முடியும் என்பதை மனதிற் கொள்ள மறந்துவிடாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னல் தாக்கமும் பாதுகாப்பும்

ஆக்கம்: அக்ஷயன்

புவியிலே தொடர்ந்து நிகழ்ந்து வருகின்ற கால நிலையின் குழப்பமான நிலைமைகள் காரணமாக தற்போது மின்னலின் தாக்கமும் அதிகரித்து வருகின்றது. ஒரே தடவையில் பலத்த பாதிப்பை ஏற்படுத்தும் புவிநடுக்கம், வெள்ளப்பெருக்கு போலல்லாமல் சிறு சிறு பாதிப்புக்களை அடிக்கடி ஏற்படுத்துகின்ற ஓர் இயற்கை அனர்த்தமாக மின்னல் தாக்கம் (Lightning) காணப்படுகின்றது.

மின்னல் தாக்கமானது மழைக்காலங்களில் பெருமளவில் ஏற்படுகின்ற ஒரு நிகழ்வாகும். இலங்கையைப் பொறுத்தவரை மார்ச், ஏப்ரல், ஒக்டோபர், நவம்பர் ஆகிய மாதங்களில் மின்னல் தாக்கம் இடம் பெறுகின்றது. அதுவும் குறிப்பாக மேற்காவுகை மழை, சூறாவளி மழை நிகழும் காலப்பகுதிகளில் இவற்றின் தாக்கம் அதிகமாகக் காணப்படும்.

மின்னலின் உருவாக்கம்



மின்னல் எனும் அனர்த்தமானது வளிமண்டலவியல் அனர்த்தத்திற்குள் அடங்குகின்ற ஒன்றாகக் காணப்படுகின்றது. ஏற்றம் பெற்ற முகில்களிலிருந்து ஏற்றமற்ற நிலத்திற்கு அல்லது ஏனைய முகில்களுக்கு பெரியளவிலான மின்னேற்றங்கள் பாயும்போது மின்னல் தோற்றம்பெறுகின்றது. இவ்வாறு பெரியளவிலான மின்னேற்றமானது நிலத்தையோ அல்லது முகிலையோ நோக்கி பாய்ந்துசெல்லல் மின்னிறக்கம் எனப்படுகின்றது.

மின்னேற்றமானது நிலத்தில் அல்லது முகிலினைச் சென்றடைகின்றபோது தோன்றுகின்ற ஒளியே மின்னல் எனவும் இவ்வாறு மின்னேற்றமானது இறக்கமடையும்போது அதற்கு அண்மையில் உள்ள வளியானது வெப்பமடைந்து விரிவடைவதினால் ஏற்படும் பெரிய சத்தம் இடி எனவும் அழைக்கப்படுகின்றது.

முகில்கள் மிக நுண்ணிய நீர்த்துளிகளினால் உருவானவையாகும். முகில்கள் பரம்பிக் காணப்படும் பகுதிக்கூடாக காற்றானது வேகமாக வீசும்போது நீர்த்துளிகள் ஒன்றுடன் ஒன்று உராய்வடைவதனால் முகில்கள் மின்னேற்றமடைகின்றன. முகில்களின் மேற்பகுதிகள் பொதுவாக நேர்மின்னேற்றத்தையும், முகில்களின் கீழ்ப்பகுதிகள் பொதுவாக மறை மின்னேற்றத்தையும் கொண்டு காணப்படும். முகிலினுள் அதிகளவில் மின்னேற்றங்கள் சேருகின்றபோது அம் மின்னேற்றங்கள் இறக்கமடைய முற்படுகின்றன. அதிகரித்த மின்னேற்றங்கள் மின்னிறக்கமடையும் போது மின்னல் ஏற்படுகின்றது. மின்னல் செய்முறை அல்லது மின்னிறக்கச் செயன்முறையானது பின்வரும் மூன்று வகைகளில் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. முகில்களுக்கிடையிலான மின்னிறக்கம் (முகில் - முகில்):

முகில் தொகுதிகளுடன் தொடர்புபட்டு ஏற்படும் மின்னிறக்கம் முகில்களுக்கிடையிலான மின்னல் எனப்படுகின்றது. குறிப்பாக ஏற்றங்கொண்ட முகில்களினுள்ளும் இரு ஏற்றம்கொண்ட முகில்களுக்கிடையேயும் ஏற்றம்கொண்ட மற்றும் ஏற்றமற்ற முகில்களுக்கிடையேயும் இந்த மின்னிறக்கம் ஏற்படுகின்றது.

02. முகில்களிலிருந்து புவிக்கு ஏற்படும் மின்னிறக்கம் (முகில் - புவி):

ஏற்றங்கொண்ட முகில்களிலிருந்து மின்னேற்றங்கள் புவிக்குப் பாய்வதால் ஏற்படும் மின்னிறக்கம் புவிமின்னல் எனப்படும்.

03. முகில்களிலிருந்து வளிக்கு ஏற்படும் மின்னிறக்க (முகில் - வளி):

மின்னேற்றம் அடைந்த முகில்களிலிருந்து மின்னேற்றங்கள் வளிக்கு பாய்வதனால் ஏற்படும் மின்னிறக்கம் வளிமின்னல் எனப்படுகின்றது.

மின்னிறக்கமடையும் பகுதியின் அடிப்படையில் இவ்வாறு முகில்மின்னல், புவிமின்னல், வளிமின்னல் என மூன்று வகைப்படும். இவற்றில் புவிமின்னல் வகையைச் சேர்ந்தவையே புவிமேற்பரப்பில் எமக்கு அதிக ஆபத்தை ஏற்படுத்துகின்றன.

மின்னலானது புவியை வந்தடையும் அல்லது தாக்கமடையும் முறைகள் நான்கு காணப்படுகின்றன.

1. **நேரடி மின்னல் தாக்கம்:**

உயரமான இடங்களில் அல்லது திறந்தவெளிகளில் இருக்கும் மனிதர்களையும் கட்டடங்களையும் நேரடியாக மின்னல் தாக்குவதனை நேரடி மின்னல் தாக்கம் என அழைக்கின்றனர்.

2. **தொடுகை மின்னல் தாக்கம்:**

தொலைபேசி, மின்தொடுகைக் கம்பி, அண்டனா மற்றும் மரங்கள் போன்றவற்றினூடாக மனிதர்கள் அல்லது உயிரினங்கள் அல்லது கட்டடங்கள் தொடர்பு பட்டிருக்கின்றபோது தொடுகையிலுள்ள மனிதர்களையும் உடமைகளையும் மின்னல் தாக்குவதனை தொடுகை மின்னல் தாக்கம் என அழைக்கின்றனர்.

3. **பக்கப் பாய்ச்சல்:**

உயர்ந்த மரங்களை தாக்குகின்ற மின்னலானது தொடுகையில் இல்லாததும் அருகில் உள்ளதுமான மனிதர்களையும் கட்டடங்களையும் தாக்குவதனை பக்கப் பாய்ச்சல் மின்னல் தாக்கம் என அழைக்கின்றனர்.

4. **படிமுறைப் பாய்ச்சல்:**

மரத்தை அல்லது கட்டடங்களை தாக்கிய மின்னல் நிலத்தை அடைந்து மனிதரின் ஒரு காலினூடாக உடலுனுள் கடத்தப்பட்டு மறுகாலினூடாக வெளியேறுவதனால் ஏற்படும் மின்னல் தாக்கத்தினை படிமுறைப் பாய்ச்சல் மின்னல் தாக்கம் என அழைக்கின்றனர்.

மின்னலினால் ஏற்படும் பாதிப்புக்கள்

இடிமின்னல் நிகழ்வுகளினால் உலகில் அதிகளவில் உயிராபத்துக்கள் ஒவ்வொரு வருடமும் ஏற்படுகின்றன. அமெரிக்காவில் உள்ள ஒரு புள்ளிவிபரவியல் தகவல்களின்படி ஒவ்வொரு வருடமும் மின்னல் தாக்கி சுமார் நூறுபேர் மரணமடைகின்றனர் எனவும் பலநூறுபேர் ஊனமடைகின்றனர் எனவும் குறிப்பிடுகின்றது. இது அமெரிக்காவைப் பொறுத்தவரையில் சூறாவளி போன்றவற்றினால் ஏற்படும் தாக்கத்தை விட அதிகமாகும்.

இத்தகைய மின்னல் தாக்கத்திற்கு இலங்கையிலும் மிக அதிகளவில் உயிரிழப்புக்கள் ஏற்படாமலில்லை. 2007 ஆம் ஆண்டில் பொலநறுவை பகுதியில் மழைக்காலத்தில் பயிற்சிபெற்றுக்கொண்டிருந்த சுமார் 40 இராணுவத்தினர் பாதிக்கப்பட்டிருந்தனர்.

2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில் 27 பேர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளனர். அதுவும் ஏப்ரல் மாதத்திலேயே 20 பேர் உயிரிழந்துள்ளனர் என இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

2011 மார்ச் மாதத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மின்னல் தாக்கி 17 மாடுகள் உயரிழந்துள்ளன. மரத்தின் மீது மின்னல் தாக்கியபோது அதன் கீழ் மாடுகள் நின்றிருந்ததனாலேயே மாடுகள் உயிரிழந்தன.

இதேவேளை கடந்த 2014 ஆம் ஆண்டில் நாட்டின் பல பாகங்களிலும் மின்னல் தாக்குதலின் காரணமாக 47 பேர் உயிரிழந்துள்ளதுடன், ஏப்ரல் மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்டோபர் மாதங்களில் மின்னல் தாக்குதல் காரணமாக அதிகளவான உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் மாதத்தில் மட்டும் மின்னல் தாக்கம் காரணமாக 20 பேர் உயிரிழந்துள்ளதுடன் ஒக்டோபர் மாதத்தில் 10 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த வருடம் ஏப்ரல் மாதத்திற்குள் 20 பேர் மின்னல் தாக்கம் காரணமாக உயிரிழந்துள்ளதுடன், கடந்த வருட ஒக்டோபர் மாதத்தில் 11 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

மின்னல் தாக்கத்தினால் மரங்கள் முற்றாகவோ அல்லது சிறிதளவோ பாதிக்கப்படுகின்றன. கடந்த 2011.12.13 அன்று மட்டக்களப்பு, சந்தணமடு ஆற்றுப் பிரதேசத்தில் மின்னல் தாக்கத்தினால் மரம் ஒன்று சேதமடைந்திருப்பதனை பின்வரும் படத்தில் கண்டு கொள்ளலாம்.

மின்னல் தாக்கத்தினால் மரம் சேதம்

மின்னல் தாக்கத்தினால் மின் உபகரணங்களும் சேதமடைகின்றன. கடந்த 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஹட்டன் அம்பகமுவை பிரதேச சபைக்கு உட்பட்ட ருவன்புர கிராமத்தில் மின்னல் தாக்கத்தினால் சுமார் 10 வீடுகளிலுள்ள மின் உபகரணங்கள் சேதமடைந்துள்ளன.

மின்னல்தாக்கத்தினால் ஏற்படும் பாதிப்புகளை குறைத்துக்கொள்ளல்

மிகக்குறுகிய நேரத்தில் தாக்கும் மின்னல் தாக்க பாதிப்பிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்வது அவசியமாகும். எனவே மின்னல் தாக்கம் பற்றிய விழிப்புணர்வு எம்மத்தியில் அவசியமாகும். அந்த வகையில் அனர்த்தத்திற்கு முன்னரான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் அனர்த்த வேளையின்போதான நடவடிக்கைகளையும் நாம் முறையாகக் கடைப்பிடிக்கின்றபோது இவற்றை தவிர்த்துக் கொள்ளலாம்.

இடிமின்னல் பொதுவாக ஏற்படுகின்ற காலப் பகுதியை அறிந்து வைத்திருத்தல் வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரையில் ஏப்ரல், மே, ஒக்டோபர், நவம்பர் மாதங்களிலும் மற்றும் மேற்காவுகை



மழை, சூறவளி மழைக் காலப்பகுதிகளிலுமே மின்னல் தாக்கம் ஏற்படுகின்றது. எனவே அத்தகைய காலங்களில் நாங்கள் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும்.

வானிலை அவதானிப்பு நிலையங்களால் வெளியிடப்படும் வானிலை எதிர்வுகூறல்களை செவிமடுத்தல் அவசியமாகும். சிலவேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என அறிவிக்கப்படும்போது இந்நாட்களில் நாம் பாதுகாப்பாக இருத்தல் வேண்டும்.

இடிமின்னலானது ஏதாவதொரு பொருளுக்கூடாக புவியில் கடத்துகின்றது. சில வேளைகளில் உங்கள் வீடுகளுக்கு அருகில் மரங்கள் ஏதாவது இல்லையெனில் வீட்டை நேரடியாக தாக்கலாம். எனவே வீடுகளுக்கு அருகில் உயரமான மரங்களை வளர்க்க வேண்டும். இதன்மூலம் மின்னல் தாக்கமானது மரத்தினூடாகக் கடத்தப்பட்டு எமது வீட்டிற்குரிய பாதிப்பு தடுக்கப்படுகின்றது.

உயர்ந்த கட்டடங்களில் இடிதாங்கியை அமைத்தல் வேண்டும். இதன் மூலம் இடிதாங்கிகள் மின்னல் தாக்கத்தை அயற்புறத்திற்கு விடாது தாம் தாங்கிப் புவிக்குக் கடத்துவதுடன், அதனால் கட்டடங்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களைத் தடுத்தும் விடுகின்றன.

இடிமின்னல் வேளைகளில் திறந்த வெளிகளில் நிற்பதையோ அல்லது விளையாடுவதையோ அல்லது வயல்களில் வேலை செய்துகொண்டிருப்பதையோ தவிர்த்துக் கொள்ளவேண்டும். ஏனெனில் அந்தப் பரந்த வெளியில் உயர்ந்த பொருளாக நீங்களே இருக்கும்போது நேரடியாக மின்னல் தாக்கலாம்.

சந்தர்ப்பவசத்தால் வெட்டவெளியில் இருக்க நேர்ந்தால் மின்னலின்போது தரையில் படுத்துவிடாதீர்கள். தரைக்கும் உடலுக்குமான தொடர்பினை இயலுமானளவில் குறைத்துக்கொள்ளக்கூடிய வகையில் குந்தி அமருங்கள். இதனால் ஓரளவேனும் மின்னல் தாக்கத்தின் பாதிப்பை குறைக்கலாம்.

30ஆம் பக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காட்டில் ஒரு இளைஞன் நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுக்குப் பசியெடுத்தது. ஒரு மரத்தில் உயரத்தில் கனிந்த பழங்கள் இருப்பதைக் கண்டான். மரத்தின் மேல் சரசரவென்று ஏறி அவற்றில் சில பழங்களைப் பறித்துத் தின்றான். மிகக் கனிந்த வாசனையுள்ள பழங்கள் கிளைகளின் நுனியில் இருந்தன. அவற்றை எட்டிப் பறிக்கக் கிளையின் மேல் நகர்ந்து சென்றபோது அவனது பாரம் தாங்காமல் ஒரு கிளை முறிந்துவிட்டது.

வித்தியாசமான உதவி



சட்டென்று சுதாகரித்த அவன் கீழே இருந்த ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான். குனிந்து பார்த்தால் தரை வெகு கீழே இருந்தது. ஏற்கனவே பயந்து போயிருந்த அவன் மேலும் பயந்து கண்ணை மூடிக்கொண்டு ''யாராவது காப்பாற்றுங்கள்'' என்று திரும்பத் திரும்ப அலற ஆரம்பித்தான். உள்ளங்கை வியர்த்து வழுக்க ஆரம்பிக்கும் நிலை வந்துவிட்டது.

தற்செயலாக அப்போது அந்தப் பக்கம் ஒரு முதியவர் வந்தார். மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தவனைப் பார்த்தார். அவன் மேல் ஒரு சிறிய கல்லை விட்டெறிந்தார். கல் பட்டவுடன் வலியில் கீழே பார்த்தவனுக்கு ஆத்திரம் வந்தது.

''பெரியவரே, உதவச் சொன்னால் கல்லால் அடிக்கிறீரே. அறிவில்லையா உமக்கு?'' என்று கோபத்துடன் கேட்டான்.

பெரியவர் பதில் பேசாமல் மற்றொரு சிறிய கல்லை எடுத்து அவன் மேல் எறிந்தார். மேலும் கோபமுற்ற இளைஞன் பெருமுயற்சி எடுத்து கையை வீசி மேலிருந்த கிளை ஒன்றை பலமாக பற்றிக் கொண்டு

''நான் கீழே வந்தால் உம்மைச் சும்மா விடமாட்டேன்'' என்று எச்சரித்தான்.

பெரியவர் மேலும் ஒரு கல்லை அவன் மேல் வீசினார். இளைஞன் இப்போது இன்னொரு பெருமுயற்சி எடுத்து கிளைமேல் ஏறி விட்டான். விடுவிடுவென இறங்கி வந்த அவன் நேராகப் பெரியவரிடம் வந்தான். அவரை சரமாரியாகத் திட்டினான்.

''ஏன் அப்படிச் செய்தீர்? உம்மை நான் உதவி தானே கேட்டேன்?'' என்றான்.

பெரியவர் அமைதியாக சிரித்துக் கொண்டே ''தம்பி.. நான் உனக்கு உதவிதான் செய்தேன்'' என்றார். இளைஞன் திருதிருவென முழித்தான்.

பெரியவர் விளக்கினார்,

''நான் உன்னை முதலில் பார்த்த போது நீ பயத்தால் உறைந்து போயிருந்தாய். உன் மூளை வேலை செய்யவில்லை. நான் கல்லை விட்டெறிந்ததும் பயம் மறைய ஆரம்பித்து நீ என்னை எப்படிப் பிடிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தாய். யோசிக்க ஆரம்பித்தவுடன் நீயாகவே உன்னைக் காப்பாற்றிக் கொண்டு கீழே இறங்கி விட்டாய். உன்னை உன்னாலேயே காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று உன் அறிவுக்கு முதலில் புலப்படவில்லை. உன் பயம் உன் கண்ணை மறைத்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து உன்னை நான் திசை திருப்பினேன்'' என்று சொல்லி விட்டுத் தன் வழியே அவர் போய் விட்டார்.

நன்றி: இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகக் கிண்ண கிரிக்கட் 2015

- 2015 ஆம் ஆண்டிற்கான 11 வது உலகக் கிண்ண கிரிக்கட் போட்டி அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து நாடுகளில் நடைபெற்றது.
- இப்போட்டியின் அரையிறுதியில் இந்தியா, தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து, அவுஸ்திரேலியா அணிகள் போட்டியிட்டதுடன் இறுதிப்போட்டி அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து அணிகளுக்கு இடையில் நடைபெற்றது.
- அவுஸ்திரேலியா மெல்போர்ண் கிரிக்கட் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றதுடன், ஐந்தாவது முறையாக சம்பியனாகி புதிய வரலாறு படைத்தது.
- அடுத்த 12 வது உலகக் கிண்ண கிரிக்கட் போட்டி 2019 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது.

குமார் தர்மசேன

- உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் விளையாடியது மட்டுமன்றி, நடுவராகவும் பணியாற்றியவர் என்ற புதிய சாதனையை இலங்கை நடுவர் குமார் தர்மசேன படைத்துள்ளார்.
- இவர் 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை அணியில் இடம்பெற்றதுடன் அவ்வகையில் இறுதிப் போட்டியில் விளையாடிய ஒருவர். உலகக் கிண்ண இறுதி ஆட்டத்திற்கு நடுவராக பணியாற்றுவது இதுவே முதல் தடவையாகும்.
- 2010 இல் இலங்கை, நியூஸிலாந்து அணிகளுக்கு இடையேயான டெஸ்ட் போட்டியின் போது முதன் முதலாக நடுவராக பணியாற்ற தொடங்கியமை குறிப்பிடத்தக்கது.



திரு. பீ. உமா சங்கர்,
B.Com (Jaf), M.Com (Kelaniya) (PDE) Spl.Trd.com,
NDBF, Sri Lanka Technical College - Colombo

லீ குவான் யூ

- சிங்கப்பூரை வியத்தகு நாடாக மாற்றிய சிங்கப்பூரின் ஸ்தாபக தந்தை லீ குவான் யூ 2015 மார்ச்சில் காலமானார்.
- 1923.09.16 இல் பிறந்த இவர், ஆங்கிலேயர்களிடம் இருந்து சுய ஆட்சி பெற்ற பின்னர் 1959 இல் நடைபெற்ற முதல் தேர்தலில் 51 தொகுதிகளில் போட்டியிட்டு 43 இல் இவரது மக்கள் செயல் கட்சி மூலம் வெற்றி பெற்று முதல் பிரதமரானார்.
- ஆசிய நாடுகளில் நான்கு ஆசிய புலிகள் என வர்ணிக்கப்படும் சிங்கப்பூர், ஹொங்கொங், தென் கொரியா, தாய்வான் ஆகிய நாடுகளுள் ஒன்றாக வருவதற்கு காரணமாகியவர்.
- 1965.08.09 இல் சிங்கப்பூர் ஓர் இறைமையுள்ள நாடாக பிரகடனம் செய்யப்படுவதற்கு காரணமாகியவர்.
- இவர் தனது அரசியல் பயணத்தில் The order of the rising sun 1967, Order of companions of honour 1970 ஆகிய விருதுகளையும் பெற்றுக் கொண்டார்.
- இவரது தகனக் கிரியை மண்டேயி மயானத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிச்சி பெனோட்

❖ அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரும் சிறந்த வர்ணனையாளருமான இவர், சிட்னியில் 2015 ஏப்ரலில் தனது 84 வது வயதில் காலமானார்.

❖ இவர் தோல் புற்றுநோயால் நீண்டகாலம் பாதிக் கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

❖ அவுஸ்திரேலியாவுக்காக 248 விக்கெட்டுக்களை எடுத்தபோது அவர் அக்கால கட்டத்தில் அதிக விக்கெட்டுக்களை கைப்பற்றிய பந்து வீச்சாள ராக திகழ்ந்தார்.

❖ இவரது காலத்தில் அவுஸ்திரேலியா டெஸ்ட் மற் றும் ஆஷஸ் தொடரில் சிறப்பான வெற்றிகளை பெற்றதுடன் இவர் தலைமை தாங்கிய 28 டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வியை சந்தித்ததில்லை.

❖ கிரிக்கட் ஆட்டத்தின் நுணுக்கங்களை கூடியள வுக்கு கையாண்ட முதல் வர்ணனையாளராக திகழ்வதுடன் இவர் மூலம் கிரிக்கட் வீரராகவும், சிறந்த வர்ணனையாளராகவும் இருந்தவர்தான் இயன் சப்பல் என்பது குறிப்பிடத்தக்கது.

❖ *1930.10.06* இல் நியூ சௌத் வேல்ஸின் பென்ரித் தில் பிறந்த இவர் 1952 தொடக்கம் 1964 வரை கிரிக்கட் உலகில் பிரகாசித்து 63 டெஸ்ட் போட்டி களில் விளையாடி 2201 ஓட்டங்களை குவித்தது டன், 248 விக்கட்டுக்களையும் கைப்பற்றினார்.

❖ டெஸ்ட் அரங்கில் 2000 ஓட்டங்கள் 200 விக்கட் டுக்கள் என்ற மைல்கல்லை எட்டிய முதலாவது கிரிக்கட் வீரர் இவராவார்.

❖ கிரிக்கட் வர்ணனையின் பிதாமகன் என இவர் சிறப்பிக்கப்பட்டுள்ளார்.

உடுகம ஸ்ரீ தம்தஸ்ஸி ரத்னபால புத்தரக்கித்த தேரர்

✎ *1930.03.17 இல் குருணாகல் மாவட்டத்தின் உடுகம பிரதேசத்தில் பிறந்த அஸ்கிரிய பௌத்த பீடத்தின் மஹாநாயக்கரான இவர் 2015 ஏப்ரலில் காலமானர்.*

✎ *1998 ஆம் ஆண்டு ஒக்டோபரில் அஸ்கிரிய பௌத்த பீடத்தின் சங்க செயற்குழுவினால் பீடத்தின் அனுநாயக்க தேரராக நியமிக்கப்பட்டதுடன், 1999 ஆம் ஆண்டு டிசம்பரில் அஸ்கிரிய பௌத்த பீடத்தின் மஹாநாயக்கரானர்.*

✎ இவர் பௌத்த தர்மத்தின் வளர்ச்சிக்காக அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளதுடன், பல்வேறு சந்தர்ப்பங்களிலும் ஸ்ரீ தலதா மாளிகையின் தலைமை தேரராகவும் மகாநாயக்கராகவும் மிகுந்த பக்தியுடன் தலதா மாளிகையை வழிபட வருகின்ற பக்தர்களை பௌத்த தர்மத்தின்பால் அதிக ஈர்ப்பு கொள்வதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்து அனைவரது கௌரவத்திற்கும் பாராட்டுக்கும் பாத்திரமான ஒருவராக திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி ஊட்டப்பட்ட நாடு 2015 - 2025

- கல்விசார் பொருளாதாரத்திற்காக 10 வருட சக்தி துறை அபிவிருத்தி திட்டத்தினூடாக இலங்கையை ஒரு சுயதேவை பூர்த்தி நாடாக மாற்றுவதற்காக எமது முழுமையான மீள் புதுப்பிக்கத்தக்க மற்றும் சுதேச சக்தியின் முழுமையான பெறுகையை அடைதல்.
- சக்தி துறை இலக்குகள்

❖ 2030 ஆம் ஆண்டளவில் சக்தியில் சுயதேவைப் பூர்த்தி நாடாக இலங்கையை மாற்றுதல்.

❖ 2015 ஆம் ஆண்டளவில் புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களில் இருந்து மின் உற்பத்தியை 50% மாகவும், 2020 ஆம் ஆண்டளவில் 60% மாகவும், 2030 ஆம் ஆண்டளவில் புதுப்பிக்கத்தக்க மற்றும் ஏனைய சுதேச சக்தி வளங்களில் இருந்து மொத்த தேவையை பூர்த்தி செய்தல்.

❖ 2025 ஆம் ஆண்டளவில் தற்போதுள்ள மின்சார உற்பத்தியின் அளவை 4050 மெகா வட்ஸில் இருந்து 6400 மெகா வட்ஸாக அதிகரித்தல்.

❖ 2020 ஆம் ஆண்டளவில் மன்னார் குடாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சுதேச வாயு வளங்களை பாவித்து ஆகக் குறைந்தது 1000 மெகா வட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்தல்.

❖ 2025 ஆம் ஆண்டளவில் சக்தி துறையின் Cartoon foot print ஐ 5% ஆல் குறைத்தல்.

❖ 2020 ஆம் ஆண்டளவில் மின்சாரத்தை எடுத்து செல்லல் மற்றும் விநியோக வலைப்பின்னலின் தொழில்நுட்பவியல் மற்றும் வர்த்தக இழப்பை 11% இல் இருந்து 8% மாக குறைத்தல்.

❖ பாதுகாத்தல் மற்றும் வினைத்திறமையூடாக வருடாந்த சக்தி தேவை வளர்ச்சியை 2% ஆல் குறைத்தல்.

❖ 2020 ஆம் ஆண்டளவில் வினைத்திறமையுடனா எடுத்து செல்லல் மற்றும் எடுத்து செல்லும் வழிகளை மின்சாரப்படுத்தும் மாற்று உபாயங்களை அறிமுகம் செய்வதன் மூலம் பாவனையில் பெற்றோலியம் எரிபொருள் பாவனையை 5% ஆல் குறைத்தல்.

❖ 2025 ஆம் ஆண்டளவில் எமது சொந்த பெற்றோல் சுத்திகரிப்பு ஆலையின் மூலம் தேசத்தின் மொத்த பெற்றோலிய உற்பத்தி தேவையை பூர்த்தி செய்தல்.

❖ 2018 ஆம் ஆண்டளவில் Gasoline மற்றும் டீசல் ஆகியவற்றின் தரத்தை யூரோ iv மற்றும் யூரோ iii ற்கு முறையே தரமுயர்த்தல்.

❖ 2015 ஆம் ஆண்டின் இறுதிக்கு முன்பதாக தொடர்ச்சியான அடிப்படையில் தேசத்தின் 100% களுக்கு இயலுமான வகையில் மின்சாரம் வழங்கல்.

- சக்தி வள அபிவிருத்திக்கான உபாயங்கள்

❖ ஒருங்கிணைக்கப்பட்ட தேசிய சக்தி கொள்கையை உருவாக்கல்.

❖ சக்தியை பாதுகாத்தல் மற்றும் வினைத்திறமையுடனான பாவனை தேசிய கொள்கையை உருவாக்கல்.

❖ சேவை மற்றும் தரம் ஆகியவற்றில் வாடிக்கையாளரை திருப்திப்படுத்தில்.

❖ உட்கட்டமைப்பின் தகுந்த நேர அபிவிருத்தி

❖ வினைத்திறமையுள்ள சக்தி துறை நிறுவனங்கள் மற்றும் சிறந்த ஆட்சியமைப்பு

❖ சக்தி துறைக்கான புதிய நிதியிடல் முறைமையொன்றை அறிமுகம் செய்தல்.

❖ சக்தி துறையில் உற்பத்தி அபிவிருத்திக்கான (பொருட்கள் மற்றும் சேவைகள்) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளில் முதலீடு.

அகரம் சஞ்சிகையை மாதாந்தம் தபாலில் பெற்றுக் கொள்ள விரும்புவோர் "Aharam Subs" என Type செய்து 077 922 8282 என்ற இலக்கத்திற்கு SMS செய்யவும். வருடாந்த சந்தா தொகை ரூ. 800 (உள்நாடு)

SMS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழியும் இலக்கியமும்

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

ஆசிரியர்: நஸ்ரா நிசாம்தீன் BA (Hons) PGDE

தொடர்ச்சி... புதிய பாடத்திட்டம் தவணைப் பரீட்சை மாதிரி வினாப்பத்திரம் - 03

02. கீழ்வரும் பாடலின் பொருளை எழுதுக.

தடித்த எழுத்திலுள்ள பகுதிக்கு சிறப்பு எழுதுக.

அ. அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு

ஆ. ஆடிக் குடத்தடையு மாடும் போதே இரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும் - **ஓடி மண்டை
பற்றிற் பரபரெனும்** பாரிற் பிண்ணாக்கு முண்
டாம்
உற்றிடு பாம்பெள்ளனவே யோது

03. விவாதம் செய்ய எழுந்த ஆறுமுக நாவலரின் தோற்றப் பொலிவு எவ்வாறு கூறப்படுகிறது?

04. அறிவுடையோர் மேன்மக்களுடனான உறவு பற்றி கூறும் நீதி நூல் எது? அந்த நீதி நூல் மேன் மக்களின் உறவின் தேவைப்பாட்டினை எவ்வாறு வலியுறுத்துகிறது?

05. அரவிந்தனின் தந்தை அமெரிக்காவில் தூண்டில் வாங்கச் சென்ற அனுபவத்தை எவ்வாறு கூறுகி றார்?

06. 'அரிவி வெட்டும் பாடல்' எனும் நாட்டார் பாடல் அரிவி வெட்டும் இளந்தாரிமாரை எடுத்துக் காட் டும் விதத்தை கூறுக.

07. 'குகப்படலத்தில்' கைகேயியை பரதன் குகனுக்கு எவ்வாறு அறிமுகப்படுத்துவதாக சித்திரிக்கப் படுகிறது?

தவணைப் பரீட்சை
மாதிரி வினாப்பத்திரம் 04

01. சுருக்கமான விடை தருக.

1. 'உப்பிலாக் கஞ்சியினையுண்ணும் மறுசுவை போல்' - சந்தி பிரித்தெழுதுக.

2. சென்னை சர்வதேச கலாசாலையில் முதன் முதல் நடத்தப்பட்ட பி.ஏ. பரீட்சையில் சித்தி எய்திய வர்கள் யாவர்?

3. காளமேகப் புலவரின் இயற் பெயர் என்ன?

4. யாருடன் நட்பு கொள்ள வேண்டுமென நால டியார் கூறுகிறது?

5. வாக்குண்டாம் பாடல் பாடிய புலவர் யார்?

6. 'கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப் பர்' - 'கானவர்கள்' எனப்படுவோர் யார்?

7. இனியவை நாற்பது பாடலில் இனிதான செயல் களாகக் கூறப்படுபவை எவை?

8. 'வெள்ளித் தகட்டினால் விரல்கட்டமிட்டு வளர்ந் தரிவி வெட்டும்...' - இதில் 'விரல்கட்டம்' எனப் படுவது எதனைக் குறிக்கிறது?

9. விவேக சிந்தாமணி நூல் கற்றோரின் நல்ல குணங் களை அறியாதவருக்காக ஒப்பிடும் செயற்பாடு எது?

10. குற்றாலக் குறவஞ்சி இயற்றப்பட்டது யாரால்?

02. கீழ்வரும் பாடலின் பொருளை எழுதுக. தடித்த எழுத்திலுள்ள பகுதிக்கு சிறப்பு எழுதுக.

அ) **கணக்காயரில்லாத வூரும் பிணக்கறுக்கு
மூத்தாரை யில்லாவவைக்களனும் - பாத்துண்
ணுந்**
தன்மையிலான ரயலிருப்பு மிம்மூன்று நன்மை
பயத்த லில.

ஆ) முழங்குதிரைப் புனலருவி கழங்கெழுத்தாடும்
முற்றமெங்கும் பரந்து பெண்கள் சிற்றிலைக்
கொண்டோடும்
கிழங்கு கிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்
போம்
கிம்புரியின் கொம்பெடுத்து வெம்புதினையிடிப்
போம்
**செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்த
டிக்கும்**
தேனலர் சண்பகவாசம் வானுலகில் வெடிக்கும்
வழங்கு கொடை மகராசர் குறும்பலவி னீசர்
வளம் பெருகும் திரிகூட மலையெங்கள் மலையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. அன்றாட வாழ்வில் கம்பியூட்டரின் தாக்கம் ஊடுருவும் விதம் குறித்து 'கம்பியூட்டர்' சிறு கதையில் எவ்வாறு சித்திரிக்கப்படுகிறது?

04. நாவலர் எழுத்தார் கட்டுரையில் நாவலரின் திறமை, நேர்மை எவ்வாறு காட்டப்படுகிறது?

05. 'நீதிப் பாடல்களில் கையாளப்பட்டிருக்கும் உவமைகள் தனிச் சிறப்பு வாய்ந்தவை' இரண்டு உவமைகளை எடுத்துக் காட்டி இக்கூற்றை விளக்குக.

06. குகப்படலத்தில் கோசலை கூறும் வாழ்த்துரையை சந்தர்ப்பத்தினூடாக தருக.

07. இனியவை நாற்பது பாடல் இனிதான செயல்களாக கூறுவதை அலசுக.

விடைகள் தொடரும்...

மேலதிக கற்றலுக்காக
அரும்பத விளக்கம்

- மண்டுகம் - தவளைகள்
- புல்லர் - அறிவில்லாதவர்
- உறுமீன் - பெரிய மீன்
- கேண்மை - நட்பு
- நித்திலம் - முத்து
- கரணம் - மனம்
- வெகுளி - கோபம்
- வானரம் - குரங்கு
- கானவர் - வேடர்
- கன்னல் - கரும்பு
- பூந்தயிர் - சுவையான தயிர்
- மேழி - செல்வம்

யூனுஸ் நபியை விழுங்கிய...

06ஆம் பக்கத் தொடர்...

உயிரினமாகவே கருதுகின்றார்கள். ஏனென்றால் மூளையின் முன் புறமாக அமைந்த cerebral cortex என்ற அடுக்கு யானை, நாய் மற்றும் மனிதர்கள் போன்ற புத்திசாலி உயிரினங்களுக்கு இருப்பது போல ஏன் மனிதர்களுக்கு இருப்பதை விட அதிகமாகவே இவற்றிற்கு இருக்கின்றது. ஆராய்ச்சியின் முடிவுகள் கூட இவற்றை நிரூபிக்கும் வண்ணமாகவே உள்ளன. சில வகை டொல்பின்கள் சுயமாக சிந்தித்து சமயோசிதமாக செயற்படுவதை ஆராய்ச்சியின் மூலம் கண்டறிந்துள்ளார்கள். இவற்றின் செயற்பாடுகளே இவற்றின் அறிவுக்கூர்மைக்குச் சான்று.

யூனுஸ் நபியை மீன் விழுங்கியபோது அவர் லாஇலாஹ இல்லா அந்த சுப்ஹானக இன்னீ குன்து மினழ் ழாலிமீன் என்று அல்லாஹ்வை துதி செய்து கொண்டே இருந்தார். இவ்வாறு மட்டும் தஸ்பீஹ் செய்யாதிருந்திருந்தால் மறுமை நாள் வரை அந்த மீனின் வயிற்றிலேயே அவரை வைத்திருப்பேன் என்று அல்லாஹ் திருமறையில் கூறுகின்றான். அவ்வாறு நடந்திருந்தால் ஒருவேளை யூனுஸ் நபியின் மீன் இன்றும் கடலில் எங்கோ ஓர் இடத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும். அல்லாஹ்வே மிகப் பெரியவன்! எதனையும் செய்யக் கூடியவன்!

ஆனால், அவர் (மீன் வயிற்றினுள்) இறைவனைத் துதி செய்து - தஸ்பீஹு செய்து கொண்டு இருக்காவிட்டால், (மறுமையில் அவர்) எழுப்பப்படும் நாள் வரை, அதன் வயிற்றிலேயே அவர் தங்கியிருந்திருப்பார். *(37:144)*

மின்னல் தாக்கமும்...

24ஆம் பக்கத் தொடர்...

இடிமின்னல் வேளைகளில் தொலைபேசிக் கோபுரங்கள், உலோகக் கொடிக்கம்பங்கள், திறந்த ஒதுக்கிடங்கள் என்பவற்றின் அருகாமையில் நிற்பதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். உயரமான மரங்களுக்கு கீழ் ஒதுங்குவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். ஏனெனில் மரங்களை நோக்கி இலகுவில் மின்னல் கடத்தப்படக்கூடியது ஆகும்.

இடிமின்னல் காலங்களின்போது மூடப்படாத வாகனங்களில் செல்வதைத் தவிர்க்கவேண்டும். குறிப்பாக துவிச்கரவண்டி, மோட்டார் வண்டி போன்றவற்றிலோ அல்லது உழவு இயந்திரங்களிலோ செல்வதைத் தவிர்க்கவேண்டும்.

வீட்டிலுள்ள மின்தொடர்புகள், அண்டனா தொடர்புகளைத் துண்டித்தல் வேண்டும். தொலைக்காட்சிகள், கணனிகள் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகள் என்பவற்றை மின் இணைப்பிலிருந்து துண்டிக்க வேண்டும். இல்லையெனில் அவை உயர் மின்சார தாக்கத்தினால் பழுதடைந்துவிடும்.

தொலைக்காட்சி மற்றும் நிலத்தொலைபேசிகளுக்குரிய அண்டனாக்களின் தொடர்பையும் துண்டித்தல் வேண்டும். மேலும் எந்தவிதமான ஆளிகளை அழுத்தும் செயற்பாடுகளையோ அல்லது மின் உபகரணங்களைப் பயன்படுத்துவதையோ தவிர்க்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்: எம்.எம்.எஸ். பிரேம் நவாபி

தரம் 10

அங்கிகளின் சிறப்பியல்புகள்

- உயிரங்கிகள் கல ஒழுங்கமைப்பு, போஷணை, சுவாசம், இயைபாக்கம், கழிவகற்றல், அசைவு, இனப்பெருக்கம் போன்ற பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளன.
- கலம் அங்கியொன்றின் அடிப்படை ஒழுங்கமைப்பு மட்டமாகக் கருதப்படும். பல்கல அங்கிகளின் ஒழுங்கமைப்பில் பின்வருமாறு சிக்கற்தன்மை அதிகரித்துச் செல்லும்.
  கலம் - இழையம் - அங்கம் - தொகுதி - அங்கி
- இழையம் என்பது குறித்த தொழிலை ஆற்றுவதற்கென சிறத்தலடைந்த கலங்களின் கூட்டம் ஆகும்.
- இழையங்கள் பல ஒன்றுசேர்ந்து அங்கம் உருவாகின்றது. அங்கங்கள் பல சேர்ந்து தொகுதிகள் உருவாகின்றன.

01. அங்கியின் உயிர் நிலவுகைக்காக சக்தியையும் பதார்த்தங்களையும் பெற்றுக் கொள்ளும் செயன்முறை போஷணை எனப்படும்.

1. தற்போசணிகளின் பின்வரும் வகைக்குரிய உதாரணங்களை எழுதுக.
   அ) ஒளித் தற்போசணிகள்
   ஆ) இரசாயனத் தற்போசணிகள்
2. தற்போசணியாக அமையாத தாவரம் ஒன்றை எழுதுக.
3. ஒளித்தொகுப்பு என்றால் என்ன?
4. ஒளித்தொகுப்பு செயன்முறைக்குரிய இரசாயனச் சமன்பாட்டை எழுதுக.
5. கலச்சுவாசம் என்றால் என்ன?
6. கலச்சுவாசத்தின் போது ஒட்சிசன் உள்ளெடுக்கப்படுகின்றமையை பரிசோதனை ரீதியாக அறிவதற்கான ஒழுங்கமைப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

அ. அமைப்பின் A இல் KOH கரைசல் பயன்படுத்தப்படுவது ஏன்?

ஆ. அமைப்பு A இல் நீர் மட்டம் உயர்ந்திருப்பதன் காரணம் யாது?

இ. ஒழுங்கமைப்பு B இல் குழாயினுள் நீர் உயராமைக்கான காரணம் யாது?



விடைகள்

1. அ) பச்சைத் தாவரங்கள்
   ஆ) சில பற்றீரியாக்கள்
2. தூத்துமக் கொத்தான் (கஸ்குட்டா)
3. தாவரக் கலங்களிலுள்ள பச்சையத்தின் மூலம் உறிஞ்சப்படும் சூரிய ஒளிச் சக்தியைப் பயன்படுத்தி நீரையும் காபனீரொட்சைட்டு வாயுவையும் கொண்டு உணவைத் தயாரிக்கும் செயன்முறை ஒளித்தொகுப்பு எனப்படும்.
4. $6\,CO_2 + 6\,H_2O \xrightarrow[\text{சூரிய ஒளி}]{\text{பச்சையம்}} C_6H_{12}O_6 + 6\,O_2$
5. உணவுச் சமிபாட்டின் ஈற்று விளைவுகள் கலத்தினுள் சக்தியாக மாற்றப்படும் செயன்முறை கலச் சுவாசம் எனப்படும்.
6.

அ. வித்துக்களின் சுவாசத்தின் போது உருவாகும் CO_2 வாயுவை உறிஞ்சுவதற்கு

ஆ. கூம்புக் குடுவையிலுள்ள O_2 வாயுவை வித்துக்கள் சுவாசித்தலுக்கு உறிஞ்சும். இதனால் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு நீர் மேலெழுகிறது.

இ. இங்கு சுவாசித்தலின் போது வெளிவிடப்படும் O_2 வாயுவும் சுவாசிக்க உள்ளெடுக்கப்படும் O_2 வாயுவும் சமநிலையில் காணப்படுதல் ஆகும்.

அனுசேபம்

- அங்கிகளின் உடலினுள் நடைபெறும் கல உயிரசாயனத் தொழிற்பாடுகளும் ஒருங்கே அனுசேபம் எனப்படும். இது இரு வகைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுசேபம்

உட்சேபம்

- அங்கிகளின் உடலில் எளிய பதார்த்தங்களிலிருந்து சிக்கலான சேர்வைகள் தொகுக்கப்படும் செயற்பாடு ஆகும்.
- இதன்போது சக்தி பயன்படுத்தப்படும். (உ+ம்) ஒளித்தொகுப்பு

அவசேபம்

- அங்கிகளின் உடலில் சிக்கலான பதார்த்தங்கள் எளிய பதார்த்தங்களாக உடைக்கப்படும் செயற்பாடு ஆகும்.
- இதன்போது சக்தி வெளிவிடப்படும். (உ+ம்) கலச்சுவாசம்

02.

1. கழிவகற்றல் என்றால் என்ன?
2. எமது உடலிலுள்ள பிரதான கழிவகற்றும் உறுப்புக்களையும் அவற்றின் மூலம் அகற்றப்படும் கழிவுகளையும் எழுதுக.
3. மனித உடலிலுள்ள பிரதான நைதரசன் கழித்தல் அங்கம் எது?
4. உறுத்துணர்ச்சி என்றால் என்ன?
5. தாவரங்கள் உறுத்துணர்ச்சியைக் காட்டும் சந்தர்ப்பங்கள் 2 ஐ எழுதுக.
6. அங்கியொன்றின் வளர்ச்சியும் விருத்தியும் இடம் பெறும் படிமுறைகளை எழுதுக.
7. தாவரங்கள் காட்டும் அசைவுகளுக்கு 3 உதாரணங்கள் தருக.

விடைகள்

1. அனுசேபப் பக்க விளைவுகளை உடலிலிருந்து வெளியகற்றும் செயன்முறை கழிவகற்றல் எனப்படும்.
2. i. சிறுநீரகம் - யூரியா, நீர், உப்புக்கள்
   ii. நுரையீரல் - CO_2 வாயு, நீராவி
   iii. தோல் - நீர், உப்புக்கள்
3. சிறுநீரகம்
4. புறச்சூழலிலும் அகச்சூழலிலும் ஏற்படும் மாற்றங்கள் அல்லது தூண்டல்களுக்குத் துலங்களைக் காட்டும் ஆற்றல் உறுத்துணர்ச்சி ஆகும்.

5.

- தொட்டாற்சுருங்கித் தாவரத்தை தொட்டவுடன் அதன் இலைகள் சுருங்கும்.
- புளி, அகத்தி, வாகை போன்ற தாவரங்களின் இலைகள் இரவு வேளையில் கூம்பிக் காணப்படுதல்.

6.

i. மீளாத வகையில் கலங்களின் பருமன் அதிகரித்தல்.
ii. கலப்பிரிவு மூலம் கலங்களின் எண்ணிக்கை அதிகரித்தல்.
iii. கலங்கள் வியத்தமடைதல்.

7.

i. நேர் ஒளித்திருப்ப அசைவு - தாவர முனையரும்பு ஒளியை நோக்கி வளருதல்.
ii. நேர் புவித்திருப்ப அசைவு - வேர் நிலத்தினுள் கீழ் நோக்கி வளருதல்.
iii. ஒளி முன்னிலை அசைவு - வாகை, அகத்தி போன்ற அவரைத் தாவர இலைகள் மாலை வேளைகளில் கூம்பிக் காணப்படுதல்.

வைரசு *Virus*

- இன்னோர் உயிருள்ள கலங்களில் மாத்திரம் தொழிற்படுவதுடன் கலங்களிற்கு வெளியே உயிரற்ற பொருளாக காணப்படும் மிகச் சிறிய அங்கியே வைரசு ஆகும். இதன் ஏனைய இயல்புகள்.

1. இலத்திரன் நுணுக்குக் காட்டி மூலம் மாத்திரம் தென்படும்.
2. நியூக்கிளிக்கமிலம் அதனைச் சூழ புரத உறை என்பவற்றைக் கொண்டது.
3. இதன் நியூக்கிளிக்கமிலம் DNA அல்லது RNA மட்டும் காணப்படும்.
4. இவை யாவும் கட்டுப்பட்ட கலத்தக ஒட்டுண்ணிகளாகும்.
5. உயிர்கலங்களினுள் மட்டும் பெருக்கமடையும்.
6. கலங்களுக்கு வெளியே பளிங்குருவான தன்மையைக் காட்டும்.
7. இவை சுவாசிப்பதில்லை.

தரம் 11 வாயுக்களின் நடத்தைக் கோலங்கள்

- வாயுக்களில் துணிக்கைகள் மிக ஐதாகக் காணப்படும் சுயாதீனமாக இயங்கும். இதனால் வாயுக்கள்பின்வரும்இயல்புகளைக்கொண்டிருக்கும்:
  - குறித்த வடிவம் இல்லை
  - குறித்த கனவளவு இல்லை
  - நெருக்கப்படும் தன்மை மிக அதிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வாயுக்களின் நடத்தையில் பின்வரும் 4 காரணிகள் செல்வாக்குச் செலுத்தும்:
  1. வெப்பநிலை (T)
  2. அமுக்கம் (P)
  3. கனவளவு (V)
  4. பதார்த்த அளவு (M)
- வாயுக்கள் தொடர்பான விதிகள்.

1. பொயிலின் விதி

மாறா வெப்பநிலையில் குறித்தளவு வாயுவின் அமுக்கம் அதன் கனவளவிற்கு நேர் மாறு விகித சமனாகும். PV = K (T), (M)

2. சாள்சின் விதி

மாறா அமுக்கத்தில் குறித்த அளவு வாயுவின் கனவளவு அதன் தனி வெப்பநிலைக்கு நேர் விகித சமனாகும். V/T = K (P), (M)

01.

i. 300 K வெப்பநிலையில் வாயுத் தொகுதியொன்றின் கனவளவு 150 cm^3 ஆகும். மாறா அமுக்கத்தில் இவ்வாயுவின் கனவளவு 225 cm^3 ஆகக் காணப்படுவதற்கு தொகுதியை எவ் வெப்பநிலைக்கு உயர்த்த வேண்டும்?

ii. மேற்படி கணித்தலில் பயன்படுத்திய விதியை எழுதுக.

iii. 200 cm^3 கனவளவுடைய வாயுத் தொகுதியொன்றில் அமுக்கம் 3×10^5 Pa ஆகக் காணப்பட்டது. இதன் அமுக்கத்தை 1×10^5 Pa ஆகக் குறைப்பதற்கு தொகுதியின் கனவளவு எவ்வாறு காணப்பட வேண்டும்?

iv. வாயுவின் கனவளவிற்கும் வெப்பநிலைக்கும் இடையிலான தொடர்பைக் காட்டும் வரைபை வரைக.

v. வாயு நிரம்பிய பலூன்களை வெயிலில் கட்டித் தொங்கவிட்டால் அவை வெடிப்பதன் காரணம் யாது?

விடைகள்

1. $\frac{V_1}{T} = \frac{V_2}{T_2}, \ \frac{150}{300} = \frac{225}{T_2}, \ T_2 = 450\ K$

2. சாள்சின் விதி

3. $P_1 V_1 = P_2 V_2$, 3×10^5 Pa x 200 = 1×10^5 Pa x V_2

4.





வெவ்வேறு கரைசல்களும் அவற்றின் உபயோகங்களும்

- கலவைகளை அவற்றில் அடங்கும் பதார்த்தங்களின் இயல்பிற்கேற்ப ஏகவினக் கலவை, பல்லினக் கலவை என வகைப்படுத்தலாம்.

01. பின்வரும் கலவைகளுக்கு ஒவ்வோர் உதாரணத்தை எழுதுக.

- கரைப்பான்களை அவற்றின் முனைவுத் தன்மையின் அடிப்படையில் முனைவுக் கரைப்பான், முனைவற்ற கரைப்பான் என இரு வகைப்படுத்தலாம். முனைவுக் கரைப்பான்களை அவற்றிலுள்ள O-H, N-H, H-F, C=O போன்ற பிணைப்புகள் இருப்பதன் மூலம் எளிதாகக் கண்டறியலாம்.
- கரைப்பான்களில் அடங்கியுள்ள கூறுகளின் அடிப்படையில் சேதனக் கரைப்பான், அசேதனக் கரைப்பான என கரைப்பான்களை இரு வகைப்படுத்தலாம். சேதனக் கரைப்பான்களில் கட்டாயமாக காபனும் பெரும்பாலும் ஐதரசனும் அத்துடன் ஒட்சிசன், அலசன்கள் போன்ற மூலகங்களும் அடங்கியிருக்கும்.

02. பின்வரும் இயல்புகளைக் கொண்ட கரைப்பான்கள் இரண்டு வீதம் எழுதுக.

i. அசேதன முனைவுக் கரைப்பான்

ii. சேதன முனைவற்ற கரைப்பான்

03. 120g யூரியாவை ($CO(NH_2)_2$) ஐக் கரைத்து 500ml யூரியாக் கரைசல் தயாரிக்கப்படின் கரைசலின் செறிவை mol dm^{-3} இல் காண்க.

கரைதிறன்

- குறித்த வெப்பநிலையில் மேலதிக கரையத்தின் முன்னிலையில் கரைப்பானில் கரையும் கரையத்தின் உச்ச அளவு அக்கரையத்தின் கரைதிறன் ஆகும்.

04. திண்ம, திரவ கரையுங்களின் கரைதிறன் தங்கியுள்ள காரணிகள் எவை?

05. வாயுக்களின் கரைதிறன் தங்கியுள்ள காரணிகள் எவை?

06. பின்வரும் சந்தர்ப்பங்களில் பயன்படும் கரைதிறனின் பிரயோகங்களை எழுதுக.

i. உப்புக் கைத்தொழில், சீனிக் கைத்தொழில் என்பவற்றில்

ii. மாசுக்கள் கொண்ட மாதிரியிலிருந்து சுத்தமான, பளிங்குருவான திரவியங்களைப் பெற்றுக் கொள்ள

iii. தாவரங்களிலுள்ள மருத்துவ குணமிக்க சேர்வைகளைப் பிரித்தெடுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்ப வேண்டாம்...!

செயலில் இறங்கவும்...!

தன் குழந்தை இப்படி இருக்கிறதே என்று புலம்புவதையே பல பெற்றோர் வாடிக்கையாகக் கொண்டுள்ளனரே தவிர, என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி யோசிப்பதில்லை.

ஒரு தாய் இப்படி புலம்புகிறார்: நான் பள்ளியில் படிக்கும்போது அனைத்திலுமே முதலாவது மாணவியாக வருவேன். எனக்கு படிப்பில் சோர்வு என்பதே இருந்ததில்லை. எதிலுமே நான்தான் முதலாவதாக வருவேன். ஆனால் என் மகள் எனக்கு நேர்மாறாக இருக்கிறாள். படிப்பில் அவளுக்கு ஆர்வமே இருப்பதில்லை. பரீட்சையில் சித்தியடைவது என்பது பெரும் சவாலாக இருக்கிறது. பாடசாலைக்குப் போகவே அவளுக்குப் பிடிப்பதில்லை என்பதுதான் அந்தப் புலம்பல்.

அந்த நாளில் குழந்தையின் பள்ளியில் என்ன நடந்தது, அதன் நண்பர்கள் யார், நடத்தப்பட்ட பாடம், குழந்தைக்கு மிகவும் உதவியாக இருந்த ஆசிரியர்கள் ஆகிய அம்சங்களைப் பற்றி பெற்றோர் புரிந்துகொள்ள வேண்டும்.

அவரது மகளின் அந்த நிலைக்கு காரணங்கள் பலவாக இருக்கலாம். குறிப்பிட்ட காரணத்தைக் கண்டுபிடிப்பது பெற்றோருக்கு கடினமாக இருக்கிறது. நன்றாக படிக்க வேண்டும் என்ற பெற்றோரின் அளவுக்கு மீறிய நெருக்கடி குழந்தைகளுக்கு இருக்கும். ஏதேனுமொரு கற்றல் குறைபாடு மற்றும் அது கண்டுபிடிக்கப்படாமை, பள்ளியில் நடக்கும் சில சந்தோஷமான, வருத்தத்திற்குரிய நிகழ்வுகள் போன்ற அம்சங்களில் ஏதோவொன்று குழந்தையின் செயல்பாட்டை பாதிக்கும் காரணியாக இருக்கும். அதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுகொள்வதுதான் அனைத்து சிக்கல்களையும் புரிந்துகொள்வதற்கான அடிப்படை.

தங்களின் குழந்தை படிப்பில் முதல் மாணவராக இல்லையே! தங்களின் பக்கத்து வீட்டுப் பிள்ளையைப் போல் அதிக மதிப்பெண்களை எடுப்பதில்லையே என்று ஏராளமான பெற்றோர்கள் ஒப்பீடுகளிலும் வீண் கவலைகளிலுமே ஒவ்வொருநாள் பொழுதையும் கழிக்கிறார்கள். இத்தகைய அவர்களின் எதிர்மறை எண்ணமானது அவர்களது குழந்தைகளுக்கு தீங்காக முடிந்துவிடுகிறது.

இளம்வயது மாணவர்களின் தற்கொலைகள் மற்றும் பெருங்குற்றங்கள் போன்ற சம்பவங்கள் பெருகிவரும் இக்காலத்தில், தமது பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் எந்தவகையில் ஆக்கபூர்வமாக உதவ வேண்டும் என்பதை தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும்.

தங்களது பிள்ளைகளின் பாடசாலையில் என்ன நடக்கிறது என்பதே எங்களுக்கு முழுமையாக தெரியாது என்பதை பல பெற்றோர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொள்கிறார்கள். இந்தப் பிரச்சினையைப் போக்க ஒரு குழந்தையின் அன்றாட செயல்பாடுகளில் சோம்பேறித்தனம் மற்றும் நேரமின்மை போன்ற காரணங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு, நாம் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்.

அந்த நாளில் குழந்தையின் பள்ளியில் என்ன நடந்தது, அதன் நண்பர்கள் யார், நடத்தப்பட்ட பாடம், குழந்தைக்கு மிகவும் உதவியாக இருந்த ஆசிரியர்கள் ஆகிய அம்சங்களைப் பற்றி பெற்றோர் புரிந்துகொள்ள வேண்டும். இதன்மூலம் உங்கள் குழந்தையின் சவால்களை நீங்கள் அறிந்து, அதற்கு எப்படி உதவ முடியும் என்பதை திட்டமிடலாம்.

குழந்தையைப் பற்றிய உங்களின் அதீத எதிர்பார்ப்புகளைக் குறைத்துக்கொண்டு, அதன் இயல்பான திறன்களுக்கு மதிப்புக் கொடுப்பதற்கு ஒவ்வொரு பெற்றோரும் பழகிக்கொள்ள வேண்டும்.

சில பெற்றோர்கள் தங்களின் அன்றாடப் பணிகளுக்கிடையிலும்கூட தங்கள் குழந்தைகளிடம் பேசுவதற்கு நேரம் ஒதுக்குகிறார்கள். எந்த நேரத்தில் குழந்தையிடம் என்ன விடயத்தைப் பேச வேண்டும் என்பதை முடிவுசெய்து, அந்த நேரத்தில் அந்த குறிப்பிட்ட விடயத்தை பேச வேண்டும். குழந்தைகள் சில விடயங்களை வெளிப்படையாக பேசுவதற்கு தயங்கினாலும், நமது சகஜமான பேச்சு அவர்களின் தயக்கத்தை உடைக்க வேண்டும்.

குழந்தைகளின் பிரச்சினைகளுக்கு அக்கறையுடன் தீர்வுகளை கண்டுபிடிக்க வேண்டும். அவர்களின் வீட்டுப் பாடங்களை நிறைவுசெய்ய ஆக்கபூர்வமான உதவிகளை செய்ய வேண்டும். கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் உங்களது குழந்தையை நியாயமான முறையில் புகழ்வதிலும் அதை உற்சாகப்படுத்துவதிலும் பயன்படுத்த வேண்டும்.

பெற்றோரின் சக்திக்கு மீறிய பிரச்சினைகளைத் தீர்க்க வெளியிலிருந்து உதவி பெறுவதில் தவறில்லை. உதாரணமாக பள்ளியில் அதீத கண்டிப்புடன் ஒரு ஆசிரியர் இருந்து, அதனால் உங்கள் குழந்தை பாதிக்கப்பட்டால் நீங்கள் அந்த ஆசிரியரிடம் சென்று, உங்கள் குழந்தையின் நிலைபற்றி பேசி, அந்த குறிப்பிட்ட ஆசிரியரின் உதவியைக் கோர வேண்டும். அந்த ஆசிரியரோடு நீங்கள் இணைந்து செயல்பட முயற்சிக்க வேண்டும். இதன்மூலம் அந்த குறிப்பிட்ட ஆசிரியருடன் உங்கள் குழந்தையின் உறவு மேம்படும்.

உங்கள் குழந்தையிடம் ஏதேனும் கற்றல் குறைபாட்டை நீங்கள் கண்டுபிடித்தால் தயங்காமல் அதைக் களைவதற்கான ஆலோசனையை நிபுணர்களிடம் கேட்கலாம். சில சிறிய குறைபாடுகளை நீங்களே எளிதாக களைந்து விடலாம். ஆனால் பிரச்சினையை தள்ளிப்போட தள்ளிப்போட அது பெரிய சிக்கல்களுக்கு வழிவகுக்கும். அப்போது இழப்பும் அதிகமாக இருக்கும்.

நன்றி: இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்களை கண்ணியப்படுத்துவோம்

கதுருவெல எம். வினாசர் (இஸ்லாஹி)

மே மாதம் முதலாம் திகதி உலகமெங்கும் மே தினம் என அழைக்கப்படும் தொழிலாளர் தினம் கொண்டாடப்படுகின்றது. இது இன, மத, மொழி, நாடு என்ற வித்தியாசமின்றி உழைக்கும் வர்க்கத்தின் ஒன்றுபட்ட சக்தியை ஒற்றுமையாக காட்டும் தினமாகும்.

இந் நாள் உலகம் முழுக்க பரந்துபட்டு காணப்படும் தொழிலாளர்களின் வலிகளுக்கு மருந்து போட்ட நன்னாள். கால வரையறையற்ற உழைப்பு, மிருகத்தனமான, அடிமைத்தனமான இன்னல்களிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள தொழிலாளர் அமைப்புக்கள் மேற்கொண்ட போராட்டங்களும் கஷ்டங்களும் எண்ணற்றவையாகும்.

வரலாற்றில் பல்வேறுபட்ட கஷ்டங்களுக்கும் துன்பங்களுக்கும் முகம் கொடுத்தே தமது உரிமைகளை வென்றெடுத்துள்ளனர். தொழிலாளர் தினம் உருவான வரலாற்றைப் பார்க்கின்றபோது முதல் தொழிலாளருக்கான உரிமைக் குரல் 1806 ஆம் ஆண்டு அமெரிக்காவிலும் அவுஸ்திரேலியாவிலும் ஒலித்தது. அதுவரை நடைமுறையில் இருந்து 12 முதல் 20 மணிநேர வரையிலான கடின உடல் உழைப்பை எதிர்த்து 10 மணி வேலை நேரம் கேட்டு ஒலித்த குரல்கள் முதலாளி வர்க்கத்தால் ஒழித்துக் கட்டப்பட்டன. 30 வருடங்களின் பின்பு 1837 இல் மீண்டும் புது எழுச்சி ஏற்பட்டது. அப்போது கிளர்ச்சி பெரிதாக வெடித்தது. தொழிலாளர்கள் சீறி எழுந்தது முதலாளி மாருக்கு பாரிய அழுத்தமாக விழுந்தது.

இதன் விளைவாக அமெரிக்காவில் ஒரு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அரசுப் பணியில் இருப்பவர்களுக்கு மட்டும் 10 மணி நேரம் வகுப்பட்டது. மற்ற தொழிலாளர்கள் கைவிடப்பட்டனர். இதில் திருப்தியடையாத தொழிலாளர்களின் புரட்சி மீண்டும் புதுப் பொலிவு கண்டது. மீண்டும் 1856 இல் போராட்டம் உக்கிரமடைந்தது.

இதன் விளைவாக தொழிலாளர்களுக்கு மே 1 ஆம் திகதி விடிவு ஏற்பட்டது. 8 மணி நேர வேலை, 8 மணி நேர மன மகிழ்வு, 8 மணி நேர உறக்கம் என மே 1 தொழிலாளர்களின் வெற்றி நாளாகவும் விடுமுறை நாளாகவும் அவுஸ்திரேலியாவில் பிரகடனப் படுத்தப்பட்டது.

இந்தப் பிரகடனம் உலகம் முழுக்க பரவுவதற்கு 33 வருடங்கள் எடுத்தன. எனவே 1889 ஆம் ஆண்டு உலகம் முழுக்க தொழிலாளர்களின் புரட்சி விழா கொண்டாடப்பட்டது.

இவ்வாறே, இலங்கையிலும் தொழிலாளர் தினம் மே 1 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. உழைப்பாளர்களின் சக்தியை, ஒற்றுமையை இந்நாள் கூறினாலும் எத்தனையோ தொழிலாளர்கள் இன்று அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். போதிய ஊதியம் இல்லாமலும் நீண்ட நேர வேலையிலும் அடிமைத்துவமாகவும் கஷ்டப்படுவதை காணக் கூடியதாக உள்ளது.

இஸ்லாம் ஒருபோதும் இதனை விரும்பவில்லை. மக்களை அடிமையாக்குவதை விரும்பவில்லை. இஸ்லாம் தொழிலாளர்களை கண்ணியப்படுத்துகிறது. அவர்களது உரிமைகளுக்காக குரல் கொடுக்கின்றது.

இஸ்லாம் தொழிலாளர்களை கண்ணியப்படுத்தும் விடயங்களில் சிலதைப் பார்க்கலாம்.

1. தொழிலாளர்களுடன் கண்ணியமாக நடத்தல்

தொழிலாளர்களின் உணர்வுகளையோ, மனதையோ புண்படுத்தும் வகையில் நடந்து கொள்ளக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தமது தொழிலாளர்களிடம் மிகவும் கண்ணியமான முறையில் நடந்து கொண்டார்கள். அவர்களிடம் வேலை செய்த அனஸ் பின் மாலிக் (ரழியல்லாஹு அன்ஹு) இது பற்றி இவ்வாறு கூறினார்கள்.

''நான் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் பத்து வருடங்களாக பணி புரிந்தேன். அல்லாஹ்வின் மீது சத்தியமாக அவர்கள் ஒரு போதும் எனக்கு சீ என்று கூறியதுமில்லை. அவர்கள் மக்களுள் நற்குணமிக்கவராக இருந்தார்கள்.''

(முஸ்லிம்)

2. தொழிலாளர்களின் உடல் நலம் பற்றி கவனம் செலுத்தல்

பணியாளர்களால் செய்ய முடியாத, சுமக்க முடியாத வேலைகளை அவர்கள் மீது சுமத்துவது அவர்களுக்கு இழைக்கும் அநீதியாகும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் ''உங்களில் ஒருவரிடம் அவரது பணியாள் அவரின் உணவைக் கொண்டு வந்தால் அவர் அப்பணியாளரைத் தம்முடன் அமர வைத்துக் கொள்ளட்டும். அவ்வாறு அமர வைத்துக் கொள்ளாவிடினும் அவருக்கு ஒரு பிடி அல்லது இரு பிடிகள் உணவு கொடுக்கட்டும்.'' (புகாரி)

எனவே, தொழிலாளியின் உடல் நலன் பற்றி அவதானமாக இருக்குமாறு இஸ்லாம் கூறுகின்றது.

3. தொழிலாளர்களோடு மென்மையாக நடத்தல்

தொழிலாளர்களுக்கு ஏசுதல், திட்டுதல், அடித்தல், சித்திரவதை செய்தல் ஆகியவற்றை தடுத்து அவர்களை மரியாதையாக நடத்தல் வேண்டும். இது

பற்றி நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இவ்வாறு எச்சரித்தார்கள்:

''தொழிலாளர்கள் சிலபோது தவறிழைக்கலாம். அவ்வேளைகளில் அவர்களின் நிறைகளைக் கருத்தில் கொண்டு அன்பு காட்ட வேண்டும். தவறு செய்கின்றவர்களை முறையாக திருத்த வேண்டும்.''

எனவே, தொழிலாளர்கள் தவறுகள் செய்கின்ற நேரம் அவர்களோடு கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும்.

4. உரிய நேரத்தில் ஊதியம் வழங்குதல்

அவர்களின் வேலைக்கான ஊதியத்தை வழங்குவதில் காலம் தாழ்த்தாமல், இழுத்தடிப்பு செய்யாமல் நடந்து கொள்ள வேண்டும். கூலி நேரத்துக்கு கொடுப்பதைப் பற்றி நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) இவ்வாறு கூறினார்கள்:

''வியர்வை உலர முன் பணியாளர்களின் கூலியைக் கொடுத்து விடுங்கள்''

எனவே, நேரத்திற்கு கூலியை வழங்க வேண்டும்.

5. தொழிலாளர்களோடு சகோதரத்துவமாக நடத்தல்

முதலாளிமார் தாங்கள் உயர்ந்தவர்கள், தொழிலாளிகள் தாழ்ந்தவர்கள் என்ற பாரபட்சம் இன்றி சகோதரத்துவமாக நடந்து கொள்ள வேண்டும். பிற மத கொள்கையை பின்பற்றுபவர்களாக இருந்தாலும் அவர்களோடு முரண்படாது அவர்களோடு சகோதரத்துவமாக நடந்து கொள்ள வேண்டும்.

6. தொழிலாளிகள் மீது வீண் பழி சுமத்தக் கூடாது

தொழிலில் ஒரு நட்டமோ, பாதிப்போ ஏற்பட்டால் அதனை முழுமையாக தொழிலாளி மீது சுமத்தக் கூடாது. அதன் பின்னணியில் உள்ள அனைவருமே பொறுப்புக் கூற வேண்டும். இவை தவிர, தொழிலாளர்களுக்கு உணவு வழங்குதல், நல்ல ஆடைகளை வழங்குதல் என்பனவும் இஸ்லாம் கூறும் தொழிலாளர்களின் உரிமைகளாகும்.

இவ்வாறு, இஸ்லாம் தொழிலாளர்களை கண்ணியப்படுத்துதல் தொடர்பான பல விடயங்களை கூறுகின்றது. அதுமட்டுமன்றி, இஸ்லாம் சோம்பேறித்தனத்தை ஒழித்து சிறந்த வியாபாரத்தை செய்யுமாறும் கூறுகின்றது.

எனவே, இஸ்லாம் கூறும் வழியில் தொழிலாளர்களை முதலாளிகள் கண்ணியப்படுத்துவதனால் ஈருலகிலும் வெற்றியடைய முடியும்.

தொழிலாளர்களை கண்ணியப்படுத்துவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது அன்னை

பத்து மாதங்கள் என்னை உன் கருவில்
தாங்கி ஈன்றெடுத்து எனக்கு
புது உலகை காண்பித்தவளே!

அறிவு எனும் பாலை ஊட்டி ஒழுக்கம் எனும்
ஆடையை அணிவித்து எனக்கு மீண்டும்
உயிர்ப்பூட்டியவளே!

என்னை உன் கண்ணுக்குள் மணியாக்கி
நெஞ்சுக்குள் நினைவாக்கி மண்ணுக்குள்
போகும் வரை மறக்காமல் இருப்பவளே!

என் அசைந்த அங்கங்களில் அடுக்கடுக்காய்
முத்தத்திற்கு மேல் முத்தம் தந்தவளே!
உன் உதிரத்தை எனக்கு பாலாக
பருக தந்து நான் உறங்க மறுத்த
இரவுகளில் என்னை தாலாட்டி
உறங்க வைத்தவளே!

நான் தத்தி நடந்து தடுக்கி விழுந்த
போது என்னை கைகொடுத்து
எழுப்பியவளே!

துன்பத்தில் கலந்து நின்று ஆறுதல்
கூறி எனக்கு தோழியாக கைகொடுத்தவளே!
நான் விளையாட்டாக செய்த குறும்புகளை
ரசித்து என்னை தட்டித்தந்தவளே!

பண்பாட்டை தந்து நான் நாகரிகமாக
வாழக் கற்றுத் தந்தவளே!
உலகிற்கு ஒளியாய் வாழ்வில் நட்சத்திரமாய்
ஜொலிக்க உதவியவளே!

கல்வி எனும் பெருஞ்செல்வத்தை உன் மனதால்
கற்றிடச் செய்தவளே!
எனது அன்னையே! இறைபாதையில்
பயணிக்கின்றேன் உன் முகம் தேடி...

எம்.எம். தஸ்னீம் பானு



கவிதைச் சரம்

சிந்திக்க சில...

முடியும் என்றால் முயற்சி செய்;
முடியாமென்றால் பயிற்சி செய்
முடிவில் முடியாமல் போனாலும்
முயற்சியைக் கைவிடாதே

நீ வாழும் போது பிறரை வாழ வை
அப்போதுதான் நீ இறந்த பின் அவர்கள்
உன்னை வாழ வைப்பர்

தன் முயற்சியில் இருப்பவன்
முன்னேறிச் செல்வான்...
பிறர் முயற்சியில் இருப்பவன்
ஒரு நாளும் முன்னேற மாட்டான்

ஒரு காரியத்தை நீ செய்யத்தான்
வேண்டும் என்ற நேரத்தில்
கஷ்டமாய் காண்பாய்
அதே காரியம் உனக்குத் தேவையெனும்
போது இலகுவாய்க் காண்பாய்

வை.எப். ரிஜ்வானா
தரம் 09
நிக/ நம்முவாவ மு.ம.வி.
நம்முவாவ

பிரார்த்தனை...

வழிகின்ற கண்ணீருடன்
தவிக்கின்ற இதயத்துடன்
துடிக்கின்ற கரங்களை
முன்னேந்தி சமர்ப்பிக்கப்படுகிறது
ஓர் பிரார்த்தனை மடல்...

எம்.எப்.எப். அம்னா
தரம் 8
கே/மா/ ஸாஹிரா தே.பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 45 நிமிடம்

வினாப்பத்திரம் I

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில்,எம்.எம். முபாரக்

சரியான சொற்களுக்கு கோடிடுக.

1. பூனையைக் கண்ட எலி ஓடி ....ந்து கொண்டது. (ஒழி, ஒளி)
2. எனது மாமா வைத்தியராக .... புரிகிறார். (பனி, பணி)
3. நாம் தினமும் ....யை வணங்குதல் வேண்டும். (இரை, இறை)
4. .... வரும் முன் அணை கட்டுதல் வேண்டும். (வெள்ளம், வெல்லம்)
5. .... வீடொன்றில் திருடர்கள் வாழ்ந்தனர். (பாழ், பால்)

பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

புதுவருட தினத்தன்று சாலையில் ஒரு வாகனம் மிக வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. அந்த வாகனத்திற்குள் இருந்தவர்கள் கூத்தும் கும்மாளமுமாக இருந்தனர். வாகனத்தை ஓட்டுபவனோ மது மயக்கத்தில் இருந்தான். அதனால்தான் வாகனத்தை தலைகால் தெரியாத அளவிற்கு செலுத்திக் கொண்டிருந்தான்.

தீடீர் என டமார் என்ற சத்தம். வாகனம் சாலையை விட்டு விலகி ஒரு பெரிய மரத்துடன் மோதியது. சிறிது நேரத்தில் வெல்லத்தில் ஈக்கள் மொய்ப்பது போல மக்கள் திரண்டு வந்து அந்த இடத்தை சூழ்ந்து கொண்டனர். யாருமே மிச்சப்படவில்லை என மக்கள் பேசிக் கொண்டனர்.

6. இப்பந்திக்கு மிகப் பொருத்தமான தலைப்பு?
   i. சாலை விபத்து ii. புதுவருடம்
   iii. கொண்டாட்டம்
7. விபத்து நடைபெற்ற தினம்?
   i. வெள்ளி ii. புதுவருடம்
   iii. இரவு வேளை
8. வாகனம் ஓட்டுபவன்?
   i. வலவன் ii. பாகன்
   iii. சாரதி
9. சாரதி இருந்த நிலை?
   i. சந்தோஷம் ii. மயக்கம்
   iii. துக்கம்

பின்வரும் சொற்களுக்கு பந்தியில் இடம்பெற்ற அதே கருத்தை தரும் சொற்கள் எது?

10. வீதி ....
11. கதி ....
12. கள் ....
13. பந்தியில் இடம்பெற்ற மேற்கோள் வாக்கியம்.
    i. வாகனம் மிக வேகமாக சென்றது.
    ii. யாருமே மிச்சப்படவில்லை என மக்கள் பேசிக் கொண்டனர்.
    iii. திடீர் என டமார் என்ற சத்தம்.
14. யாருமே மிச்சப்படவில்லை என்பதனால் கருதப்படுவது யாது?
    i. எல்லோரும் உயிர் பிழைத்தனர்
    ii. யாருமே உயிர் பிழைக்கவில்லை
    iii. எல்லோரும் காயத்துக்குள்ளாகினர்
15. விபத்து இடம்பெற்றதற்கான காரணமாக அமைவது?
    i. மதுபோதை, வேகம்
    ii. சந்தோஷம், கூத்தும் கும்மாளமும்
    iii. புதுவருடம், நண்பர்கள்

ஒவ்வோர் உருவிலும் வெற்றுக் கட்டத்தினுள் வர வேண்டிய உருவைத் தெரிந்து அதற்குரிய எண்ணை கட்டத்தினுள் எழுதுக.

16.



i. ii. iii.

17.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18.



i. ii. iii.

19. கடலை 1 Kg இன் விலை ரூபா 130 எனின் 2 kg 750 g கடலையின் விலை எவ்வளவு?

i. ரூபா 347.50 ii. ரூபா 367.50

iii. ரூபா 357.50

20. நீர்த்தொட்டி ஒன்றில் நீர் 15 l 500 ml உள்ளது. அதிலிருந்து 8125 ml வெளியேற்றப்பட்டது. நீர்த் தொட்டியில் மீதமாகவுள்ள நீரின் அளவு யாது?

i. 7 l 350 ml ii. 6 l 775 ml

iii. 6 l 275 ml

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

21. செவ்வகமொன்றில் காணப்படும் உச்சி, விளிம்பு, முகம் ஆகியவற்றை முறையே எழுதினால் வருவது?

i. 12, 8, 6 ii. 8, 12, 6

iii. 6, 8, 12

பின்வரும் எண்களை ஒழுங்கின் பிரகாரம் விரித்து எழுதுக.

22. 5032

i. 5000+100+30+2 ii. 5000+000+2+30

iii. 5000+100+20+0

23. 4120

i. 100+400+0+20 ii. 4000+200+100+0

iii. 4000+100+20+0

24. 3.5 kg எத்தனை கிராம்?

i. 350 g ii. 3500 g

iii. 35 g

25. 2099 இற்கு அடுத்து வரும் எண் யாது?

i. 3000 ii. 2010

iii. 2100

26. மகன் தகப்பனை விட எப்போதும்

i. வயதில் கூடியவன்

ii. வயது குறைந்தவன்

iii. உயரம் கூடியவன்

27. பின்வரும் பொருட்களில் உலோகப் பாத்திரத்தில் இட்டு பாதுகாக்க முடியாத பொருள் யாது?

i. சீனி ii. கடலை

iii. உப்பு

28. முட்டையிட்டு அடைகாக்காத பிராணி எது?

i. கோழி ii. ஆமை

iii. காகம்

29. மணிக்கூட்டில் மிக வேகமாக அசையும் கம்பி எது?

i. மணிமுள் ii. நிமிடமுள்

iii. செக்கன் முள்

30. தங்க ஆபரணங்களை அளக்க பயன்படும் அலகு?

i. mg, kg ii. g, mg

iii. g, kg

31. சுண்ணாம்புக்கல் கூடுதலாக காணப்படும் பிரதேசம் எது?

i. திருகோணமலை ii. புத்தளம்

iii. கண்டி

32. இரத்தினக் கற்கள் கூடுதலாக காணப்படும் பிரதேசம் எது?

i. கண்டி ii. நுவரெலியா

iii. இரத்தினபுரி

33. நதிகள், ஆறுகள் காணப்படாத பிரதேசம் எது?

i. கொழும்பு ii. சிலாபம்

iii. மன்னார்

34. இலங்கையிலுள்ள இந்துக்கள் தைப்பொங்கல் தினத்தை கொண்டாடும் மாதம்?

i. ஏப்ரல் மாதம் ii. ஜனவரி மாதம்

iii. டிசம்பர் மாதம்

35. எமது நாட்டினை ஆட்சி செய்த வெளிநாட்டவர்களை ஒழுங்கு முறைப்படி எழுதினால் வருவது?

i. போர்த்துக்கேயர், ஆங்கிலேயர், ஒல்லாந்தர்

ii. ஆங்கிலேயர், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்

iii. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்

36. வட மத்திய மாகாணத்தில் காணப்படும் பிரதேசங்கள்?

i. பொலன்னறுவை, கண்டி

ii. அனுராதபுரம், காலி

iii. பொலன்னறுவை, சீகிரிய

37. துறைமுகங்கள் தொடர்புடன் காணப்படாத நகரம்?

i. ஒலுவில் ii. திருகோணமலை

iii. புத்தளம்

38. தாவர வேர்கள் இலகுவாக வளர்வதற்கு உதவும் ஒரு பிராணி?

i. நத்தை ii. மண்புழு

iii. எறும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. தேசப்படங்களில் புகையிரதப் பாதைகளைக் குறித்துக் காட்ட பயன்படுத்தப்படும் நிறம்?

i. கறுப்பு ii. ஊதா

iii. பச்சை

பேச்சு வழக்கு சொற்களின் எழுத்து வழக்கினை எழுதுக?

40. எளனி ....

41. போறே ....

கூட்டத்தின் பெயர்களைக் குறிக்கும் சொற்களை எழுதுக?

42. மயில் ....

43. புத்தகம் ....

இரு படங்களுக்கும் பொருந்தும் மூன்றாவது படத்தை தெரிந்து கோடிடுக.

44.

i. ii. iii.

45.

i. ii. iii.

46. நன்றி மறப்பது நன்றன்று எனக் கூறியவர்?

i. ஔவையார் ii. வள்ளுவர்

iii. பாரதியார்

47. மூதுரையை இயற்றியவர்?

i. ஔவையார் ii. வள்ளுவர்

iii. பாரதியார்

48. சிறுவர் பாடல்களை அதிகம் பாடியவர்?

i. ஔவையார் ii. வள்ளுவர்

iii. பாரதியார்

49. பின்வரும் பாடலை பூர்த்தி செய்க.

ஓடி விளையாடு பாப்பா

நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா

கூடி விளையாடு பாப்பா

ஒரு குழந்தையை .... பாப்பா

விடைகள்

1. ஒளி
2. பணி
3. இறை
4. வெள்ளம்
5. பாழ்
6. i
7. ii
8. iii
9. ii
10. சாலை
11. வேகம்
12. மது
13. ii
14. ii
15. i
16. iii
17. i
18. ii
19. iii
20. ii
21. ii
22. iii
23. iii
24. ii
25. iii
26. ii
27. iii
28. ii
29. iii
30. ii
31. ii
32. iii
33. iii
34. ii
35. iii
36. iii
37. iii
38. ii
39. i
40. இளநீர்
41. போகிறேன்
42. குழாம்
43. கட்டு, அடுக்கு
44. ii
45. iii
46. ii
47. i
48. iii
49. வையாதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

நேரம் 1 மணி 15 நிமிடம்

வினாப்பத்திரம் II

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

பின்வரும் பாடலில் விடுபட்ட சொற்களை எழுதுக.

1. .... அகத்தில் நல்ல கதிரொளி நீதான் இந்தப் பாரிடை துயில்வோர் 2. .... பாய்ந்திடும் எழுச்சி நீதான்.

பின்வரும் சொற்களை பொருத்தமான இடங்களில் எழுதுக.

நீவிர், மயில், அவர்கள், என்னுடைய, உமது, என்

தன்மை 3. .... 4. ....

முன்னிலை 5. .... 6. ....

படர்க்கை 7. .... 8. ....

கீறிட்ட சொல்லின் கருத்தை எழுதுக.

9. பரிதி முன் பனிபோல ....

10. கருணை இல்லத்தில் முதியோர் வாழ்ந்தனர். ....

11. வேங்கையின் சீற்றம் மானை கிலி கொள்ளச் செய்தது. ....

பின்வரும் சிங்கள சொற்களின் தமிழ் கருத்தை எழுதுக.

12. நயா .... 13. லொகு ....

பின்வருவனவற்றுக்கு ஆங்கில சொற்களை எழுதுக.

14



15.

சரியான விடையை எழுதுக.

16. மாமா, மாமி போல பேரன் ....

17. எருமை முக்காரமிடும் போல தேவாங்கு ....

18. .... தூங்கி எழுவது போல கண் வளர்தல் தூங்குதல்

19. மாட்டு வண்டி கடகட போல சதங்கை ஒலி ....

20. பறவையின் மலம் .... போல ஒட்டகத்தின் மலம் இலண்டம்

ஆங்கில வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.

21. Open your book ....

22. This is my nose ....

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

23. தரப்பட்ட உருவில் மிக கூடுதலாக காணப்படுவது எது?



i. முக்கோணம்

ii. வட்டம்

iii. சதுரம்

தரப்பட்டுள்ள A, B, C, D எனும் நான்கு அடைப்புக்களில் எந்த அடைப்பிலுள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி மிகப் பெரிய எண்ணை உருவாக்கலாம்?

24. A) 8, 6, 1, 4   B) 8, 6, 4, 6

C) 8, 6, 0, 4   D) 8, 8, 6, 4

25. கூட்டினால் வரும் விடை யாது?

$\frac{1}{4}+\frac{1}{2}+\frac{3}{4}$ i. $\frac{5}{10}$ ii. $1\frac{1}{2}$ iii. $\frac{9}{34}$

26. கழித்தால் வரும் விடை யாது?

$3-\frac{3}{4}$ i. $3\frac{1}{4}$ ii. $2\frac{1}{2}$ iii. $3\frac{1}{4}$

27. வெற்றிடத்திற்கு வர வேண்டிய எண்ணை எழுதுக. 1794 + ... + 389 = 2500

i. 327   ii. 337   iii. 317

28. புல், பூண்டு தாவரங்கள் நிமிர்ந்து நிற்பதற்கு பிரதான காரணமாக அமைவது?

i. நீர்   ii. காற்று

iii. சூரிய ஒளி

29. வைரத் தன்மையற்ற தண்டுகள் உள்ள தாவரம்?

i. முருங்கை   ii. வேம்பு   iii. முதிரை

கீழே குறிப்பிடப்பட்ட பெரியார்களின் பெயர்களை தெரிவு செய்து எழுதுக.

(திருவள்ளுவர், மகாத்மா காந்தி, ஆறுமுக நாவலர், ரி.பி. ஜாயா, அறிஞர் சித்திலெப்பை, சேர் பொன் இராமநாதன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30 

....

31.

....

32.

....

33.

....

34. 3 kg இல் 150 g கொண்ட சீனிப் பொதிகள் எத்தனை கட்டலாம்?

i. 20 ii. 300

iii. 30

35. 3m நாடாவில் 20 cm துண்டுகள் எத்தனை வெட்டலாம்?

i. 20 ii. 30

iii. 15

36. வானவில் காலையில் எத்திசையில் தென்படும்?

i. கிழக்குத் திசை ii. மேற்கு திசை

iii. வடக்கு திசை

37. உணவுக்கு சுவையூட்ட உதவும் இலை?

i. ரம்பை ii. வெற்றிலை

iii. துளசி இலை

38. சகல வயதினருக்கும் மிக அவசியமான உணவு வேளை?

i. பகல் ii. மாலை

iii. காலை

39. தென்னஞ் சிரட்டையைப் பயன்படுத்தி செய்யப்பட்ட பொருள்.

i. கோப்பை ii. அகப்பை

iii. கரண்டி

40. வில்பத்து விலங்குகள் சரணாலயம் அமைந்துள்ள மாவட்டம்.

i. புத்தளம் ii. அனுராதபுரம்

iii. குருணாகல்

41. சீகிரியாவிற்கு அண்மையிலுள்ள பிரசித்தமான நகரம்?

i. தம்புள்ள ii. அனுராதபுரம்

iii. கண்டி

42. உடலில் உள்ள நீர் அதிகளவு வெளியேறும் சந்தர்ப்பம்

i. தொலைக்காட்சி பார்க்கும்போது

ii. கரம் விளையாடும்போது

iii. கடினமான வேலை செய்யும்போது

43. அதிகளவு உவர்த்தன்மை கொண்ட நீர்?

i. ஆற்று நீர் ii. குளத்து நீர்

iii. கடல் நீர்

44. உப்பு உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும் நீர்?

i. குளத்து நீர் ii. கடல் நீர்

iii. கிணற்று நீர்

45. பண்டைய முறைகளில் உப்பிலிட்டு பேணப்பட்ட உணவு?

i. கத்தரிக்காய் ii. எலுமிச்சம் பழம்

iii. இறைச்சி

46. கூடுதலாக கல்சியம் உள்ள உணவு?

i. பலாக்காய் ii. இறைச்சி

iii. நெத்தலி

47. மாலைக்கண் நோய் ஏற்பட பின்வருவனவற்றுள் எது காரணம்?

i. விற்றமின் B குறைவு

ii. விற்றமின் A குறைவு

iii. விற்றமின் C குறைவு

48. சூழலுக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாத போக்குவரத்துச் சாதனம்?

i. கப்பல் ii. பேருந்து

iii. சைக்கிள்

49. உடலை மட்டும் சக்தி முதலாகக் கொண்டு இயங்கும் வாகனம்?

i. தோணி ii. மாட்டு வண்டி

iii. கப்பல்

50. எரிபொருள் இன்றி பயணம் செய்யக் கூடிய வாகனம்?

i. தோணி ii. இயந்திரப் படகு

iii. கப்பல்

51. பாதசாரிகள் பின்பற்ற வேண்டிய சட்டதிட்டங்கள்?

i. எப்போதும் இடது பக்கமாக செல்லல்

ii. எப்போதும் வலது பக்கமாக செல்லல்

iii. எப்போதும் இடம் வலமாக செல்லல்

பின்வரும் சொற்களை பிரித்து எழுதுக.

52. மக்கட்பேறு ....

53. பத்தொன்பது ....

54. பேருதவி ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் வாக்கியங்களை நிகழ் கால வாக்கியங்களாக மாற்றுக.

55. பெண்கள் ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

....

56. மாணவர்கள் இயற்கை காட்சிகளை கண்டு ரசித்தனர்.

....

57. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு

....

58. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்

....

எமது கிராமத்தில் நடைபெற்று முடிந்த கோயில் திருவிழா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது ஐந்து சொற்களையேனும் கொண்டிருப்பதோடு எழுவாய், பயனிலை போன்றன இடம்பெற்றிருத்தல் அவசியம்.

விடைகள்

1. காரிருள்
2. கண்ணிற்
3. என்
4. என்னுடைய
5. நீவிர்
6. உமது
7. மயில்
8. அவர்கள்
9. சூரியன்
10. அன்பு
11. புலி
12. பாம்பு
13. பெரியது
14. Butterfly
15. Eye
16. பேத்தி
17. அமுழ்
18. கண்மலர்தல்
19. கணீர் கணீர்
20. எச்சம்
21. உங்களுடைய புத்தகத்தை திறவுங்கள்
22. இது என்னுடைய மூக்கு
23. iii
24. D
25. ii
26. i
27. iii
28. i
29. i
30. மகாத்மா காந்தி
31. அறிஞர் சித்திலெப்பை
32. சேர் பொன் இராமநாதன்
33. ஆறுமுக நாவலர்
34. i
35. iii
36. ii
37. i
38. iii
39. ii
40. i
41. i
42. iii
43. iii
44. ii
45. ii
46. iii
47. ii
48. iii
49. i
50. i
51. ii
52. மக்கள் + பேறு
53. பத்து + ஒன்பது
54. பெரிய + உதவி
55. பெண்கள் ஆடிப்பாடி மகிழ்கின்றனர்.
56. மாணவர்கள் இயற்கை காட்சிகளை கண்டு ரசிக்கின்றனர்.
57. ஒற்றுமையே பலம்.
58. விடா முயற்சி பலன் தரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல பண்புகளை
உறுதியுடன் பின்பற்றுவோம்

உண்மை சொல்வதை உறுதி யாகக் கடைப்பிடிக்க இல்லை யென்றால் உங்கள் மீதான நம்பிக்கை போய்விடும்.

- பிரான்சிஸ் ஹட்சன்

மனிதர்கள் சிறுவயதில் நல்ல விடயங்களைக் கற்றுக் கொள் கிறார்கள். அவர்கள் வளர, வளர சிலர் அவற்றிலிருந்து தவறிப் போகிறார்கள். நிர்ப்பந்தம், வேறுவழியில்லை என ஆயிரம் போலிக் காரணங்களை சொல்லி நேர்மையான வழிகளிலிருந்து தவறி விடுகிறார்கள்.

எப்போதுமே நேர்மையான வழியில் செல்ல முடியும், வெல்ல முடியும் என்பதில் தயக்கம் காட்டுகிறார்கள். எத்தனையோ வெற் றியாளர்கள் உண்மையான, நேர்மையான வழிகளில் முயன்றி ருப்பதை அவர்கள் அறியாமலிருக்கிறார்கள்.

உண்மையான வீரர்கள் குறுக்கு வழியில் போய் வெற்றி பெற விரும்ப மாட்டார்கள். அவர்கள் எப்போதும் திறமை, கடின உழைப்பு, நேர்மை எனும் வழியிலேயே செல்வார்கள்.

நல்ல பழக்க வழக்கங்கள் வருவதற்கு கஷ்டமாக இருக்கலாம். ஆனால் அவற்றோடு வாழ்வது சுலபமே ஆகும். தீய பழக்க வழக் கங்கள் சுலபமாக வருவதாக இருக்கலாம். ஆனால் அவற்றோடு வாழ்வது கடினமாகும்.

உண்மை பேசுதல், நேர்மையைக் கடைப்பிடித்தல், வாக்கு றுதி நிறைவேற்றுதல், ஏமாற்றாமல் வாழ்தல் போன்ற நற்பண் புகளை உறுதியுடன் பற்றிப் பிடிக்க உறுதி பூண்டு கொள்வோம். வாழ்வில் வெற்றி பெறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org